ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு மார்கழி-மீ 4-உ (18—12—1932) | மலர் 34.

உண்மையை உணரவேண்டுமா? அப்படியானால்

## இந்தியாவின் குறைபாடுகள்.

### The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கத்தில் மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D. Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் 1. இந்தியாவின் கல்வி, 2. மதம், 3. வகுப்பு போராட்டம், 4. மதபுத்தகங்கள், 5. மதபுத்தகங்களிலுள்ள குற்றங்கள், 6. பகுத்தறிவும் மதமும், 7. மரணத்தின் மர்மம், 8. மதமும் ஒழுக்கமும், 9. சோதிடமும், சகுனமும், முதலிய தலைப்புகொண்ட அத்தியாயங்களும், ஆழ்ந்த கருத்துக் கொண்ட முகவுரை, முடிவுரை ஆகியவைகளும் கொண்ட 160-பக்கம் உள்ள பெரிய புஸ்தகம். இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல் வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் எழுதப்பட்டதாகும்.

| | |
|---|---|
| இதன் விலை அணா ... ... ... | 0—8—0 |
| குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... | 0—6—0 |

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர்,
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.




Dr, R. M. Shastry's

# Ayurvedic Golden Tonic.

(Registered by the Government of India)

"பல டாக்டர்களின் நன்மதிப்புப்பெற்றது."

உத்திரவாதமுள்ளது உடனே பரீட்சித்துப்பாருங்கள்.

மேல்கண்ட கோள்டன் டாணிக்கு தன் குறைந்த மதிப்பு (விலை விலையு)டன். உயர்த்தி விற்கப்படும் இதர ஆயுள்வேத ஔஷதங்களைப் பந்தயத்திற்கு அழைக்கிறதென்றால்! இதன் குண சிரேஷ்டத்தைப்பற்றி இன்னும் எவ்வளதூரம் புகழ்ந்தெழுதுவது:—

உண்மையில்—இரத்தசுத்தி, இரத்தவிர்த்தி, தேகபலம், தேகபுஷ்டி, மனோதிடம், தாதுவிர்த்தி, முகவசீகரம் முதலிய பல நன்மைகளை அடைய விரும்பும் ஆண், பெண் எல்லா வயதோரும் இதை கட்டாயம் ஒரு தடவையாகிலும் உபயோகிக்கும்படி சிபார்சு செய்கிறோம்.

இதனால்—பாண்டு, காமாலை, கை கால் எரிதல், வாய்ப்புண், வாய்நாற்றம், குலைநோய், இருதய அதர்ச்சி, கை கால் வலி, அல்லது சோர்வுண்டாதல், இடுப்புநோய், மூத்திரத்தோடு தாது போதல், மூத்திரம் பலவித நிறங்களாகவும் அடிக்கடிப்போதல், மலபந்தம், மலத்தோடு சீழ் அல்லது ரத்தம் போதல், பசியின்மை, பலவித சிரங்குகள், உன்மத்தம், சோம்பல், நாள்பட்ட சுரம் முதலிய பல ரோகங்களை நிவர்த்திப்பதோடும், ஸ்திரிகளுக்கு மாத—ருதுகாலங்களில் உண்டாகும் தலைவலி, கழுத்திழுப்பு, தலை சுற்றல், வயிற்றுவலி மூட்டுகளின் வீக்கம், அகால மாதருது முதலிய பல கேடுகளை உண்மையில் நிவர்த்திப்பதில் நிரம்பவும் அனுபவப்பட்டது.

மற்றும்—உட்காச்சலாய் (கணச்சூடு) தசைப்பற்றுக்குறைந்து நாளுக்கு நாள் மெலிந்து இளைத்துப்போகும் மாணவர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் தேக புஷ்டியையும, ஆத்ம சக்தியையும், மூளைக்குப் பலத்தையும் கொடுப்பதில் இது சஞ்சீவிக்கு ஒப்பானது.

15-வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் ஒரு புட்டி டாணிக்கும், மேற்பட்டவர்கள் இரண்டு புட்டி டாணிக்கும் சாப்பிடவேண்டும்.

12 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1—8—0, வி. பி. செலவு அணா 15, இரண்டு புட்டிக்கு வி. பி. செலவு ரூ. 1—7—0.

விலாசம்:— Dr. R. M. Shastry

Ayurvedic Golden Tonic Pharmacy.

Post-Rakah Mines

Singhbum Dist. (N. India.)



## Read.
## The 'Citizen'

and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.



## 'சமத்துவபோதினி.'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை

ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.


## "குடி அரசு"
கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபநாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே.எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி,

கோயமுத்தூர்.
வி. ரங்கராஜலு, நியூஸ்
ஏஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

---

மதுரையில்
குடி அரசு கிடைக்குமிடம்.
எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி மதுரை.


உங்கள்
## கண்ணையும்
## காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரஙகளில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.



## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தஙகவயல்.



## குஷ்டம்

வெண்குஷ்டம் - பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

# மதத்தைப்பற்றி லெனின் எழுதியது.

## 2-ம் அத்தியாயம்.

## மதத்தைப்பற்றித் தொழிலாளர் கட்சியின் அபிப்பிராயம்.

**(The attitude of the workers towards Religion)**

[S. R. & E. V. R. மொழிபெயர்ப்பு]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

இந்தக் கொள்கையை ஜர்மனி தேசத்து சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சி சரியானபடி உணர்ந்து கத்தோலிக்க பாதிரிகளுக்கு சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்றும், அவர்கள் ஜர்மனி தேசத்திற்கு வர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் எந்த மதத்தையும் போலீஸ் அதிகாரத்தின் மூலம் தடைப்படுத்தக் கூடாதென்றும் வாதாடினார்கள். இந்த வாதம் "மதம் அவரவருக்குச் சொந்த விஷயம்" என்ற 1891ம் வருஷத்து இர்பூர்ட் Erfurt திட்டத்து பெயர்பெற்ற சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியின் அரசியல் திட்டத்தைப் பின் தாங்கி நின்றது.

### மார்க்ஸ் கோள்கைக்கு புது அபாயம்.

இந்தத் திட்டங்கள் எல்லாம் இக்காலத்தில் சாதாரண அனுவல்களில் ஒன்றாய்க்கருதப்படுகின்றன. ஆகையால் இப்போது மார்கஸ் கொள்கைகளுக்குப் புது மாதிரியான அபாய மேற்பட்டிருக்கிறது. அதாவது சமயோசித வாதமாகும். (Opportunism)

இர்பூர்ட் திட்டத்தில் கண்ட விஷயத்தை விவரித்துச் சொல்லும்போது சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த நாமும் நம்முடைய கட்சியும் மதமென்பது அவரவர்கள் சொந்த விஷயம் என்று பாவிக்கவேண்டுமென்பதாய் திரித்துக்கூறப்படுகிறது. இந்த மனப்பான்மையைப்பற்றி 1890ம் வருஷத்தில் ஏஞ்சல்ஸ் கடினமான அவதூரான வார்த்தைகள் எதுவுமில்லாமல் சாவதானமாய் எதிர்த்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அவ்வறிக்கையில் "கவர்மெண்ட் சம்மந்தப்பட்ட வரையில் மதம் அவரவர்கள் சொந்த விஷயமாகக் கருதப்படவேண்டுமேயன்றி சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியைச்சேர்ந்தவர்கள் தங்கள் சம்மந்தப்பட்ட விடத்திலாவது, மார்க்ஸ் கொள்கை சம்மந்தப்பட்ட விடத்திலாவது மதம் என்றுடைய சொந்த விஷயமாகவும் விட்டுவிட முடியாது" என்று ஏஞ்சல்ஸ் அழுத்தமாகக்கூறினர்.

### "முறண்பாடு" காண்பதின காரணம்.

மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் இருவரும் மதம் என்ற விஷயத்தைப்பற்றி ஏற்படுத்திக்கொண்ட திட்டத்தின் சரித்திரம் மேற்கண்டவாறாகும். மார்க்ஸ் கொள்கைகளின் அந்தரங்கத்தை ஆராய்ந்து உணராமல் நுனிப்புல் மேய்ந்து வெளித்தோற்றத்தை மாத்திரம் கண்டவர்களுக்கு மேற்கண்ட திட்டத்தின் சரித்திரத்தில் அநேக முறண்பாடுகள் தோன்றலாம். மற்றும் அது ஒரு நிலையில் இல்லாமல் முன்னுக்குப்பின் முறண்பாடுகள் உள்ளதாகத்தோன்றலாம். உண்மை நாஸ்திகக்கொள்கை மதங்களுடன் சலுகை காட்டும் திட்டத்தில் மறைந்து கிடப்பதாகும். கடவுளை ஒழிப்பதற்கு ஏற்பட்ட புரட்சியுடன் மதக்குருக்களிடம் நல்ல பிள்ளையாயிருந்து அவர்களை வெருட்டாமல் இருக்க ஆசைப்படும் கோழைத்தனம் கலந்திருப்பதாகவும் இன்னும் பலவாராகவும் சட்டுக்கடங்காத வாய்ப்பறை சாற்றுகிறவர்கள் மார்க்ஸ் கொள்கையைப்பற்றிக் குறை கூறி இருக்கிறார்கள்.

ஆனால் மார்க்ஸ் கொள்கைகள் உண்மையை அறிய பிரயத்தனப்பட்ட எவருக்கும் இந்தத் தத்துவத்தை யோசித்து அறியவும், சர்வதேச சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியின் அனுபவத்தை ஆராயவும், முயற்சி எடுத்துக்கொண்ட எவருக்கும் மதத்தைப்பற்றிய நமது திட்டம் முன்னுக்குப்பின் விரோதமில்லாமல் மார்க்ஸ் ஏஞ்சல்ஸ் இருவரும் யோசனை செய்து ஏற்படுத்தியிருக்கும் திட்டமே எனப்புலப்படும்.

அதில்லாமல் மேற்போக்காய் நம் திட்டத்தில் சலன புத்தி தோன்றுகிறதென்று குறைகூறப்படுவதெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் Dialetic Materialism டைலேட்டிக் மெட்டீரியலிசம் என்ற தர்க்கரீதியான பிரகிருதவாதம் நமது தத்துவத்தில் இருந்து கிளம்பும் உண்மைகள் என்று வெளிப்படும்.

### மார்க்ஸ் திட்டம் மிதவாதமா?

மார்க்ஸ் திட்டத்தில் மத விஷயத்தில் மிதவாதக்கொள்கை அனுசரிப்பதாகக் காணப்படுவதற்குக் காரணம் நாம் ஏதோ தந்திரமாக நடந்து கொள்வதாக நினைப்பது தவறு. மதக்குருக்கள்மாரை வெருட்டி விடாமல் அவர்களை நம்முடன் சேர்த்துக்கொள்ள சூட்சி செய்வதாக நினைப்பதும் தவறு. இவ்விஷயத்தில் மார்க்ஸினுடைய அரசியல் கொள்கை அவருடைய முழு சித்தாந்தத்தோடு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. மார்க்ஸினுடைய தத்துவம் மெட்டீரியலிசம் அதாவது பஞ்சேந்திரியங்களுக்கு எட்டிய பிரகிருதிப்பொருள்களே உண்மை என சாதிக்கும் தத்துவமாகும். ஆகையால் 18-வது நூற்றாண்டில் தோன்றிய Encyclopediasts என்சைக்ளோபிடியஸ்ட்ஸ், Feurback பூர்பாக் இவர்களுடைய சித்தாந்தத்தைவிட மார்க்ஸினுடைய சித்தாந்தம் மேலானது. எப்படியெனில் அது சரித்திர ஆராய்ச்சியிலும் சமூக அமைப்பு ஆராய்ச்சியிலும் கலந்திருக்கிறது. "நாம் மதத்தை எதிர்க்கவேண்டும்' என்பதே பிரகிருதிவாதத்தின் முதல்படியாகும். ஆகையால் இதுவே மார்க்ஸ் தத்துவத்தினுடைய முதற்படியாகும். ஆனால் மார்க்ஸ் தத்துவம் மற்ற பிரகிருதிவாதிகளைப்போல முதல்படியிலேயே நின்று விடுவதில்லை. மேல்படிகளுக்கும் அது ஏறிச்சென்று கொண்டிருக்கும். அது சொல்லுவதாவது:— நாம் உண்மையில் மதத்தை எதிர்க்க வேண்டுமானால் நம்முடைய பிரகிருதி வாதமுறையில் இருந்து மக்களிடத்தில் மதம் பரவியிருப்பதற்கும் மதத்தினிடத்தில் மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதற்கும் காரணம் என்னவென்பதைக் கண்டுபிடித்து வெளியிடவேண்டும்.

### மத யுத்தம் எப்படி இருக்கவேண்டும்?

மதத்தோடு தொடங்கும் யுத்தம் வெறும் வாக்குவாதமாகவும், பிரசாரமேடையுத்தமாகவும் ஆகிவிடும்படி விட்டுவிடக்கூடாது. இந்த யுத்தமானது செயலில் நடைபெறும் தொழிலாளர் இயக்கத்தோடு இணைக்கப்பட்டு மதத்திற்கு உயிர் கொடுப்பதாய்—மதத்திற்கு வேர்களாய் இருக்கும் சமூக அமைப்புகளை வெட்டி எறிவதே இந்த யுத்தத்தின் நோக்கங்களாக இருக்கவேண்டும். பட்டணவாசிகளான தொழிலாளர்களில் அறிவற்ற பிற்போக்காளர்களும் நடுத்தர வேலைக்காரர்களும் தோட்டத் தொழிலாளர்களும் பெருவாரியாக ஏன் மதத்தில் கட்டுப்பட்டிருக்கிறார்கள்? என்பதற்குக்காரணம் பொது மக்களின் அறியாமையே என்று முதலாளி கூட்டத்தில் முற்போக்கானவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும், சீர்திருத்தவாதிகளும், முதலாளிகளில் பிரகிருதவாதிகளும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆகையால் "மதத்தை ஒழிக்க வேண்டும்" "நாஸ்திகம் நிலைக்க வேண்டும்" "நாஸ்திகப் பிரசாரமே நமது முக்கிய வேலை" என்றெல்லாம் அவர்கள் பறைசாற்றுகிறார்கள். இதற்கு மார்க்ஸ் கொள்கையைப் பின்பற்றுகின்றவர்களின் பதிலாவது:— "நீங்கள் சொல்வது உண்மையல்ல. இந்தப்படி சொல்லுவதும் நினைப்பதும் மேற்போக்கான முதலாளி நிலையின் குறைபாட்டையும் குறுகிய நோக்கத்தையுமே காட்டுகிறது. உங்கள் குறுகிய நோக்கம் மதத்தினுடைய பிரகிருதக்காரணங்களை கண்டுபிடிக்க உங்களை விடாமல் பாரமார்த்திக வாதிகளின் பாதைக்கு உங்களைக்கொண்டு போய் விட்டது" என்பதேயாகும்.

### மதத்தின் அடிப்படை.

தற்காலம் முதலாளிகளின் ஆதிக்கத்திற்கு அடங்கிய தேசங்களில் மதத்திற்கு அடிப்படை சமூக அமைப்பாகவே இருந்து வருகிறது. தற்காலத்திய மதவேர்கள் தொழிலாளர்களை அழுத்திவைக்கும் சமூகக்கொடுமையில் ஊன்றி நிற்கின்றன. மகா யுத்தங்கள், பூகம்பங்கள் முதலியவற்றைவிட தொழிலாளி மக்களை ஆயிரமடங்கு அதிகமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் வாட்டி வதக்கிவரும் முதலாளித்தனத்தில் குருட்டு ஆட்சியில் தொழிலாளிகளுக்கு ஏற்படும் அதைரியத்திலேயே மதத்தின் வேருகள் வலிமை பெருகின்றன. "பயத்திலிருந்துதெய்வங்கள் உதித்தன" என்பது பழமொழி. முதல் என்னும் குருட்டு சக்தியைக்கண்டு தொழிலாளர்க

## மக்களின் மடமையே மாமாங்கமாகும்.

## கும்பகோணத்தில் கூட்டம் சேர்ந்தால் காலரா வரும், பிளேக்கு வரும்.

ளும், சில்லரை வியாபாரிகளும் பயப்படுகிறார்கள். ஏனென்றால் முதல் என்பது அவரவர்கள் கண்களுக்கு ஓர் நிலையுள்ளதாகப்புலப்படவில்லை. அதனுடைய மாறுதல்களைக் கணக்கிட்டு எதிர்பார்க்க முடியவில்லை. "திடீரென்றும்" "எதிர்பாராமலும்" "தற்செயலாயும்" ஏற்படும் முதலினுடைய மாறுபாடுகளால் மக்களுக்கு ஆபத்தும், அறிவும் ஏற்பட்டு, பிச்சை எடுக்கவும் வறுமை உறவும், மானத்தை விற்கவும் (விபசாரம்) பசியால் இறக்கவும் நேரிடுகின்றது. இந்த நிலையே மதத்திற்கு ஆணிவேர் என்பதை நமது பிரகிருதிவாதிகள் மனதில் இருத்தாவிட்டால் பிரகிருதவாதம் என்னும் அறிவிப் பள்ளிக்கூடத்தைத் தாண்டிப்போகவே அவர்களுக்கு சக்தி இருக்காது.

### வெறும் பிரசுரங்கள் மாத்திரம் போராது.

அறிவைப் புகட்டும் பிரசுரங்கள் எத்தனை படித்தபோதிலும் பொது ஜனங்கள் மதத்தின் ஆட்சியிலிருந்து விடுபட மாட்டார்கள். முதலாளித்தனத்தின் ஆட்சியில் அடிபட்டு நசுக்கப்பட்டு முதலாளித்தனத்தின் குருட்டுச் சக்தியால் அழிவுரும் மக்கள்மதத்தைஉண்டாக்கி, உருவகப்படுத்தி, ஒற்றுமைப்படுத்தி வெளியிடும் சமூக அமைப்புகளை தாங்களாகவே எதிர்த்து யுத்தம்செய்யமுன்வந்தால் ஒழிய மதத்தின் ஆதிக்கம் ஒழியாது. முதலாளிகளின் ஆட்சி எந்த எந்த ரூபமாக அமுலில் இருக்கிறதோ அந்தந்த ரூபங்களை எல்லாம் எதிர்த்து அழிக்க தொழிலாளர்கள் முன்வரவேண்டும்.

இதற்கு அர்த்தம் மதத்திற்கு விரோதமாக அறிவை வளர்க்கும் புஸ்தகங்களை வெளியிடுவது கெடுதியென்றோ அனாவசியமென்றோ கருதக்கூடாது. இதற்கு அர்த்தம் என்னவென்றால் சோஷியலிட் ஜனநாயகக்கட்சியின் முக்கிய முதலாவதான வேலை கொடுமைபடுத்தப்பட்ட பொதுமக்களைத் திரட்டிக் கொடுமைப்படுத்தும் கூட்டத்தாரை எதிர்ப்பது தான் என்பதும், நாஸ்திகப்பிரசாரமானது அடுத்தபடியான இரண்டாந்தர நோக்கமே ஒழிய முதன்மையானது அல்ல என்பதேயாகும்.

டையலெட்டிகல் மெட்டீரியலிசம் Dialetical Materialism தர்க்கரீதியான பிரகிருதி வாதம் என்னும் மார்க்ஸ், எஞ்சல்ஸ் தத்துவத்தை ஆராய்ச்சி செய்து அதனுடைய அஸ்திவாரம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க முடியாதவர்கள் மேற்கண்ட உண்மையை உணரமுடியாது. அவர்கள் மக்களின் மனதில் ஏற்பட்ட அழுக்காறுகளை நீக்கி உண்மையை உணர்த்தும் பிரசாரத்தை இரண்டாம் பட்சமானது என்று அவமதிப்பதா என்பதாக ஆச்சரியப் படுவார்கள்.

### மதப்போரின் கருத்து.

மதத்திற்குவிரோதமாகப்போர் தொடுப்பது ஆயிரக்கணக்கான வருஷங்களாக அறிவு வளர்ச்சிக்கும் வாழ்க்கை முற்போக்குக்கும் ஏற்பட்டிருக்கும் விரோதியை எதிர்ப்பதல்லவா? இந்த முக்கியமான விஷயத்தை விட்டுவிட்டு சமீப காலத்திய அனுபவத்தில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார அரசியல் எதிர்ப்புகளை முதன்மையாகக் கருதுவதா என்று கேட்பார்கள்.

தற்காலம் மார்க்சினுடைய கொள்கைக்கு ஏற்பட்டிருக்கும் இம்மாதிரியான ஆக்ஷேபணைகள் மார்க்சினுடைய கொள்கைகளைச் சரிவர உணராததால் ஏற்பட்டவைகளேயாகும். இந்த ஆக்ஷேபணைகளைக் கிளப்புகிறவர்கள் கண்களுக்குத் தோன்றும் முரண்பாடுகளை எல்லாம் மனித வாழ்க்கையில் ஏற்படும் முரண்பாடுகளேயாகும். இவை தத்துவ முரண்பாடுகளே ஒழிய வெறும் சொல்லளவில் மாத்திரம் ஏற்பட்ட முரண்பாடுகளல்ல. எவராலும் புதிதாக உற்பத்தி செய்யப்பட்டவைகளுமல்ல. நாஸ்திகப் பிரசாரம் செய்யும் கொள்கையைப்பற்றிய வேலைக்கும் அதாவது தொழிலாளர் கூட்டத்தில் சில பகுதியில் ஏற்பட்டிருக்கும் மதப்பற்றுதல்களை உடைக்கும் வேலைக்கும் அப்படிப்பட்ட வேலையின் பயனாக ஏற்படும் தொழிலாளர் இயக்க போராட்ட அபிவிர்த்திக்கும் ஏதோ பெரிய வித்தியாசமிருப்பதாக வரையறுப்பது தர்க்கரீதிக்குஅடங்காத வாதமாகும். அதாவது அடிக்கடி மாற்றப்பட்டும்,சமயோசிதம் போல் உண்டாக்கப்பட்டுமுள்ள ஒரு எல்லையை நிரந்தரமானதாக ஆக்குவதாகும். வாஸ்தவத்தில் பிரிக்க முடியாமல் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கும் அம்சங்களை பலாத்காரத்தினால் கிழித்துத்தனிமைப் படுத்துவதாகும்,

### வேலை நிறுத்தமும் நாஸ்திகப்பிரசாரமும்.

உதாரணமாக ஏதாவது ஒரு நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை இரண்டுபாகமாகப் பிரிப்பதாக வைத்துக்கொள்ளுவோம். ஒரு பாகத்திலுள்ளவர் தமது நிலையைப் பூரணமாக உணர்ந்த சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியைச்சேர்ந்தவர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். இவர்கள் நாஸ்திகர்களாகவே இருப்பார்கள் என்பது வெளிப்படை. மற்ற இரண்டாவது பகுதியிலுள்ளவர்கள் பிற்போக்குடையவர்களாகவும், நாட்டுப்புறங்களிலும், குடியானவர்களிடமும் இன்னும் சம்பந்தம் வைத்திருப்பவர்களாகவும்,இன்னும் கடவுளிடத்தில் நம்பிக்கைவைத்திருப்பவர்களாகவும், கோவிலுக்குப் போகிறவர்களாகவும்,குருக்கள் மார்களுடையஆதிக்கத்திற்கு அடங்கி நடப்பவர்களாகவும் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம், இந்த இரண்டு பகுதியாரும் சேர்ந்து கிறிஸ்தவ தொழிலாளர் சங்கம் ஏற்படுத்திக் கொண்டதாக வைத்துக்கொள்ளுவோம். இந்நாட்டில் பொருளாதாரப் போராட்டம் ஒன்று ஏற்பட்டு வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டதாகவும் வைத்துக்கொள்ளுவோம். இப்படிப்பட்ட தருணத்தில் மார்க்சினுடைய கொள்கையைப் பின்பற்றுகிற ஒருவன் வேலை நிறுத்தம் ஜயமடையவேண்டும் என்பதையே மற்றெல்லாவற்றையும்விட முக்கியமானதாகக்கருதி, இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை நாஸ்திகர்கள் என்றும், கிறிஸ்தவர்கள் என்றும் பிரித்துக் கூறுவதை எதிர்த்துக்கூறுவதை எதிர்த்து அம்மாதிரியான பிளவுகள் உண்டாக்கப்படுவதையும் கண்டித்து, போராட்டத்தில் ஒற்றுமையாய் முனைந்து நிற்கவேண்டியது அவசியமாகும். இம்மாதிரியான சமயங்களில் நாஸ்திகப்பிரசாரம் செய்வது அனாவசியமும் கெடுதியினைவிப்பதுமாகும். இப்படிச் சொல்லுவது பிற்போக்கான பகுதியைப் பயமுறுத்தி நம்மை விட்டு வெருட்டாமல் இருக்கவேண்டும் என்ற குறுகிய நோக்கத்தாலல்ல. தேர்தல்களில் நம் கட்சியாருக்கு ஓட்டுக்கிடைக்காமல் போய்விடும் என்ற பயத்தாலும் அல்ல. ஆனால் தொழிலாளர் இயக்கத்தினுடைய உண்மை முன்னேற்றத்தைக் கருதியும் தற்காலம் முதலாளிகளின் ஆட்சிக்கு அடங்கிய சமூகத்தில் கிறிஸ்தவத் தொழிலாளர்களை சோஷியலிஸ்ட்டு ஜனநாயகக்கட்சிக்கும், நாஸ்திக நம்பிக்கைக்கும், வெறும் நாஸ்திகப் பிரசாரம் செய்வதால் மாற்றுவதைவிட நூறு மடங்கு அதிக வேகமாக மாற்றுவதற்கே யாகும். இம்மாதிரியான சந்தர்ப்பத்திலும் நிலைமையிலும் நாஸ்திகப்பிரசாரம் செய்வது என்பது,கோவிலுக்கும் குருக்களுக்கும் உடந்தையாயிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளிடத்தில் மதத்தைப்பற்றிய வித்தியாசங்கள் தோன்றவேண்டும் என்று நம் எதிரிகள் ஆசைப்படுவதை நாம் நிறைவேற்றிக் கொடுப்பதேயாகும்.

### மார்க்சை பின்பற்றுகிறவர்கள்.

எதேச்சை வாதிகள் எது எப்படியிருந்தாலும் கடவுளோடு யுத்தம் செய்தாகவேண்டும் என்று சொல்லுவது பிராமணர்களுக்கும், முதலாளிகளுக்கும், உடந்தையாக இருப்பதாகும். அநேக விஷயங்களில் எதேச்சைவாதிகளுடைய செயல்கள் முதலாளிகள் கூட்டத்திற்கு உடந்தையாய் இருப்பதை நாம் கண்டிக்கிறோம். மார்க்ஸ் கொள்கையை பின்பற்றுகிறவர்கள் பிரகிருதிவாதியாய் இருக்கவேண்டும். ஆனால் அவர்களுடைய பிரகிருதிவாதம் தக்கரீதியாய் இருக்கவேண்டும். அவர்கள் மதத்தோடு போர்புரியும்போது காரியத்தில், அனுஷ்டானத்தில் இல்லாமல் வெறும் மனச்சண்டையாகவோ, காலதேசவர்த்தமானத்திற்கு ஏற்றதாயும், இடம்பொருள் ஏவலுக்கு ஒத்ததாயும் இல்லாமல் ஆகாயத்தில் நடைபெறும் யுத்தமாகவோ இருக்கக்கூடாது. அன்றியும் அப்போரானதுசெய்கையில், அனுஷ்டானத்தில் நடைபெறுவதாகவும் நமது கண்முன் வளர்ந்து வரும் முதலாளி, தொழிலாழி போருக்கு தலைகொடுப்பதாகவும், அந்தப்போரின் மூலம் பொது மக்களுக்கு தானாகவே அறிவு வளர்ச்சியும், உணர்ச்சியும் ஏற்படக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# (Scientific Method and Ignorant Beliefs.)

## மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

### சில மெஞ்ஞானிகளின் மதத்தடுமாற்றம்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(14)

நமது "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற சிறு புத்தகத்தில் கூறியுள்ள விஷயங்களைக்குறித்து அதனைப்படித்த சிலர் கண்டித்துவருகின்றார்கள். அத்தகையோர் இரண்டுவகைப்படுவர். தெரிந்துகொள்ளவேண்டுமென்று தங்கள் சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளவிரும்புவோர் ஓர் வகுப்பார். மதசார்பாக நின்று கண்டிக்கப்புகுந்தோர் மற்றொரு சார்பார். இவ்விருதாரத்தாரில் நமது புத்தகத்தில் எழும் சில பிரச்சினைகளை விளங்கவைக்க வேண்டுமென்றவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பலவித பிரச்சினைகளுக்கு மெஞ்ஞான முறைப்படி இதுவரை விளக்கிவந்தோம். மதப்பற்றுடையோருக்கு நிகழ்ந்த பிரச்சினைகளை இனி இரண்டொரு அத்தியாயத்தில் "குடி அரசு" இடம் தரும்வரை சுருங்க உரைப்பாம்.

"கடவுளும் பிரபஞ்சமும்" என்ற புத்தகத்தில் முக்கியமாக கண்டுள்ள விஷயங்கள் யாதெனில் "கடவுள்" என்ற ஒருவர் இருப்பாராமாயின் அவருக்கு இடமெங்கே என்பதை முதற்கேள்வியாகக்கொண்டு அதற்கு விடை மெஞ்ஞான ஆராய்ச்சியில் கிடைக்காதென்பதை விளக்கிக் காட்டி வந்தோம். நமக்குத்தோன்றும் பிரபஞ்சத்தில் எங்கும் அத்தகைய பொருளுக்கு இடம் இல்லை என்றதை விஞ்ஞானிகள் அனுபவப்பட்டவரைஎடுத்துரைத்தோம். ஆனால் மதஸ்தர்கள், தாயுமானர், தனது பாடலில் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்ற வாக்கியத்தை திரும்பத்திரும்ப எடுத்தெடுத்துரைக்கின்றனர். கடவுளை அங்கும் இங்கும் இருப்பதாக காட்ட முடியாது, ஆனால் அவர் எங்கும் நிறைந்துளர் என்றார் ஒரு பத்திரியாசிரியர். இதுதான் நமக்கு விளங்கவில்லை. எந்த பொருளையாகிலும் தெரிந்துகொள்ளவேண்டுமானால் அப்பொருள் அங்கேயாகிலும், இங்கேயாகிலும் இருப்பதாகச்சொன்னால் தான் அதை அறிந்துகொள்ள முடியும். அங்கும் இங்கும் இல்லாத பொருள் எங்கும் இருப்பதென்றால் மனிதனுக்கு விளங்கக்கூடியதாகத் தோன்றவில்லை. விஞ்ஞானத்திற்குத்தெரிந்தவரை தெரிந்துள்ள பிரபஞ்ச முழுமையும், தூசும் (Cosmic dust) கிரணமும் (Cosmic Rays) நிறைந்துளதாகத் தோன்றுகிறது. இவைகளின் சையோகத்தால் பிரபஞ்சப்பொருள்களாகிய நீங்களும் நானும் மற்ற சில அசீவப்பொருள்களும் உண்டாயிருக்கவேண்டுமென்பதுதான் நமது அனுபவ யுக்தியாக ஏற்பட்டுள்ளது. இவைகளுக்குமேல் அல்லது இவைகளுக்கு உள்ளும் புறம்புமாக நிறைந்துள்ள "கடவுளென்பது" ஒன்றுண்டென்று சொல்வது ஊமைகண்ட கனவென்றே மதிக்கவேண்டும். 'எங்கும்' நிறைந்த பொருள் என்றால் நமக்கு விளங்கவில்லை. ஆனால் நமது கண்டனக்கர்த்தாக்களுக்கு விளங்கியதோ அது நமக்குத்தெரியாது. யாருக்காவது "எங்கும்" என்றது விளங்குவதாகச்சொன்னால் அது பாசாங்கே அல்லாது அது உண்மையாகாது. "அணுவுக்குள் அணுவாய், மகத்துக்குள் மகத்தாய், சீவனுக்குள் சீவனாய், அறிவுக்குள் அறிவாய், நிற்கும் பரம்பொருளென்றால்" என்ன விளங்கியமாதிரி எனறு கேட்கின்றோம். அணு, மகத்து, சீவன், அறிவு இவை இன்னவை என்று தெரியும். ஆனால் அவைகளுக்குள்ளும், வெளியுமுள்ள பரம்பொருளோ, ஈசனோ, மாயவனோ அல்லாவோ, ஜாகோவாவோ, கடவுளோ, என்றால் இச்சொற்கள்தான் நமக்கு விளங்கவில்லை. பெய்யும் மழைக்குள்ளும் புறம்பும், பெய்கின்றவன் ஒருவன் உளனா என்று கேட்கின்றோம்? இச்சொற்களை பண்டைகாலப்பழக்கத்தால் கிளிப்பிள்ளை சொல்வதுபோல் சொல்லுகின்றோமேயொழிய மனிதரில் யாரும் அச்சொற்களுக்குறிய பொருளை கண்டதுமில்லை விண்டதுமில்லை. "உலகெலாம்வுணர்ந்து ஓதுவதற்கறியவன்" என்றார் ஒரு வேதாந்தி! அதற்கப்பால் என்ன தெரிந்ததாகச் சொல்லமுடியும்? ஒரு சொல்லை பல பெயரிட்டு அழைப்பதால் அச்சொல் விளங்கியதாகச்சொல்ல முடியாது. அச்சொல்லுக்குறிய பொருளை விளங்கச்செய்தால் மாத்திரம் தெரியுமேயொழிய ராமனை, வீரன், முத்தன் என்று பலபெயரிட்டு அழைப்பதால் ராமன் இன்னனென்று சொல்வதற்கில்லை. ஒரு சுன்னத்தை (Cypher or Zero) அதாவது ஒரு (0) பூஜ்யத்தை பல பூஜ்யத்தோடு (000000.........) சேர்த்தால் முதல் பூஜ்யம் பூஜ்யமே. கணிதத்தில் தெரியாத ஒன்றை "எக்ஸ்" (x) என்று சொல்லுவதுண்டு. அந்த எக்சை (x) பல எக்ஸ்களால் (xxxx.........) அறிய முடியா என்பார் கணித நூலோர். அதுபோல் தெரியாத "கடவுளை" சிவன், மகேஸ்வரன், ருத்திரன், விஷ்ணு, அல்லா (Allah) ஜகோவா (Jahova) பெரிய ஆவி (Great spirit) அகண்டப்பொருள் (The Aboslute), குட்சல் [Kutzelcotl)கோடல்அப்ரகடாப்ரா(Abracadabra காடலப்ரா (Cadalabra) அல்லது பீ, பா; போ, பம், (Pe, Fa, Fo, Fum) என்று அழைத்தலால் விளங்கியது என்னை?

இருக்குவேதத்தில்(Rigveda) ஒரு பிரபல வாக்கியமொன்றுண்டு. அதாவது "ஏகம், சத், விப்ரா பகுதா வதந்தி" என்று வடமொழியில் ஒரு வாக்கியமுண்டு. அதன் பொருள் என்னவெனில், இருப்பது ஒன்று, அதனை அறிஞர் பலபெயரிட்டு அழைப்பார்கள். இந்த வாக்கியம் சொன்னதை திருப்பிச்சொல்லுதல் என்ற வழுக்கு வாதத்தைப்போன்றது. இதனுடைய வாதமென்னவெனில் இருப்பது ஒன்று எப்படி பல பெயரிட்டு அழைப்பதால் பல பெயரிட்டு எதை அழைக்கின்றார்கள்? இருக்கும் ஒன்றை இந்த வாதத்தில் எந்த சொல் விளங்கியமாதிரி? ஒன்றென்பது பல பெயர் இட்டழைப்பதனால் விளங்கியதாகக்காணோம். அல்லது பல பெயரைக்கொண்டழைப்பதால் ஒன்று என்பது இன்னதென்று விளங்கியதாகக்காணோம். ஒன்று என்னவஸ்து என்று கேட்டால் அதன் பலபெயரைக் காட்டுகின்றார்கள். பல பெயரைக்கேட்டால் ஒன்றைக்காட்டுகின்றார்கள். இந்த வேத வாக்கியம் நாம் முன் சொன்ன சைபர் (Cypher) ஞாயத்தைப்பொருந்தியுளது. ஒன்றென்பது பலபெயரால் விளங்கவில்லை. பலபெயர் ஒன்றால் விளங்கவில்லை. இந்த வழக்கு வாதத்தால் (Fallacious argument) தெரியாமையை தெரியச்செய்ததாக ஏற்படவில்லை.

இந்தப் பிரபலவாக்கியத்தின் ஆபாசத்தைச் சற்று தெளிவாக எடுத்துக்காட்டுவோம். இருப்பது ஒன்றை "கடவுள்" என்பார்கள். அதனுடைய பல பெயர்கள் சிவன், விஷ்ணு, பிரம்மா, அல்லா, ஜாகோவா, முதலிய கடவுளர் என்பார்கள். ஆனால் சிவன், விஷ்ணு, முதலிய கடவுளர் வெவ்வேறு கடவுளாக மதஸ்தர் எண்ணி நடந்துவர அவைகளை ஒன்றென்று வாதிப்பதில் யாது பயன்? இந்த பிரபல வாக்கியத்தின் ஆபாசத்தை நமது 'ஆத்திக நாத்திக' வாசகத்தில் விபரமாகக் காட்டியுள்ளோம். இந்த வாசகத்தைப்படித்தோருக்கு அந்த மாபெரும் வேத வாக்கியம் ஜாலவாக்கியமென்றே (Conjuring words) கருதாமல் இரார்கள்.

இந்த மகாவாக்கியத்தின் மூன்றாம் வழுக்கு (Fallacy) என்னவெனில் தெரியாமையை, தெரியாமையைக்கொண்டு விளக்க முயலும் வழக்காகும். தெரியாத பொருளை தெரியப்படுத்தவேண்டுமானால் தெரிந்தப்பொருளைக்கொண்டு தெரிவிப்பதுதான் சரியான ஞாயமாகும். ஆனால் இந்த வாக்கியப்படி தெரியாத ஒன்றை, தெரியாத பல பெயர்களால் தெரிவிக்கும் ஆபாசத்தைக்கொண்டுளது. "கடவுள்" இன்ன பொருள் என்பது யாருக்கும் தெரியாது. சிவன், விஷ்ணு, பிரம்மா, அல்லா, ஜகோவா, என்பவைகளும் யாருக்கும் தெரியா. யாருக்கும் பிரத்தியட்ச அனுபவமில்லை. ஆனால் இந்த பிரபல வாக்கியப்படி தெரியாத கடவுளை, தெரியாத சிவன், விஷ்ணு முதலிய சொற்களால் விளங்கியதாகக் கருதவேண்டுமாம்! இது என்ன ஞாயம்?

இத்தியாதி காவியச்சொற்களைக் கொண்டு Poetic Expressions மதஸ்தர்கள் மாந்தரை ஏமாற்றுகின்றார்கள். மதங்களெல்லாம் மனோபாவனைகளேயொழிய (Fancy) உண்மையானவைகளல்ல. வேத, புராண, சமய இதிகாசங்கள் யாவும் (Poetic expressions of a bygone age) சென்ற கால காவியச்சொற்களென மதிப்பதுவே விவேகிகளுக்குப் பொருந்துமென அறிக. காவியச்சொற்களை உண்மையென நம்பி பாமர மக்களை மயக்குவது மதிமோசமென்றே கருதல் வேண்டுமெனவும் அறிக. மதங்கள் வேண்டுமானால் அதில் கூறியுள்ள கதைகளை பஞ்சதந்திர கதைகளைப்போல் படிக்க வையுங்கள். இந்தக்கதைகளை மெஞ்ஞானமென்று கூறுதலாவது; அனுபவவிஷயங்களென்று மதித்தலாவது Pure and Simple deception அதாவது வெறும் மயக்கமென அறிதல்வேண்டும்.

மதப்பற்றுள்ள சில பத்திராதிபர்களும், சில பிரசங்கிகளும் 'கடவுள்' வுண்டென்பதற்கு மெஞ்ஞானத்தில்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# தேசியக் கடன் என்றால் என்ன?

வேலையில்லாத தொழிலாளர் சங்கத்துப் பிரசுரம்.

தேசியக் கடன் என்றால் என்ன? அது எப்படி ஏற்பட்டது? அது தொழில் செய்து வாழும் மக்கள் நித்திய வாழ்க்கையை எப்படி பாதிக்கின்றது? என்பவைகளான விஷயங்களை கவனித்துப் பார்த்தால் தொழிலாளிகளின் விடுதலை முயர்ச்சிக்கு—சமதர்மத்துக்கு எதிராக பேசப்படும் வாதங்களுக்கு சமாதானம் சொல்லவும், அப்படிப் பட்ட வாதங்களுடன் எதிர்த்துப் போராடவும் இனியும் தொழிலாளிகளுக்கு விரோதமாய் ஏற்படப் போகும் கொடுமைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் தொழிலாளிகளாய் இருந்து வருபவர்கள் முதலாளிகளுக்கு விரோதமாயும் தேசியக் கடன்கள் விர்த்தியாவதற்கு விரோதமாயும் போராட்டங்கள் பலமாக நடத்துவதற்கு அனுகூலமாய் இருக்கும்.

## கடன் எப்படி ஏற்பட்டது?

பிரிட்டிஷ் தேசியக் கடனின் ஆரம்பத்தையும், அதன் விருத்தாந்தத்தையும் அறிய வேண்டுமானால் 1869 ௵த்தில் 3-வது வில்லியம் (William the IIIrd and Mary) அரசரும், மேரி அரசியும் பட்டத்துக்கு வந்து ராஜ்ஜியாதிகாரம் ஏற்படுத்தி, தேசத்தின் பேரால் தேசத்திற்கு என்று கடன் வாங்க பார்லிமெண்டில் அதிகாரம் பெற்ற விருத்தாந்தங்களையும் நடவடிக்கைகளையும் கவனித்துப் பார்க்க வேண்டும். மேற்படி அரசி பட்டத்திற்கு வருவதற்காக ஏற்பட்ட யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் ஆக அந்த வருஷத்தில் முதல் முதல் 600000 ஆறுலக்ஷம் பவுன் கடன் வாங்கினதானது, இன்று 1932-ம் ௵த்தில் 752,96,42000 எழுநூத்தி ஐம்பத்தி இரண்டு கோடியே, தொண்ணூற்று ஆறுலக்ஷத்து, நாற்பத்தி இரண்டு ஆயிரம் பவுனாக கடன் ஏறி இருக்கிறது.


தேசிய கடன் இந்தப்படி மலைபோல் வளர்ந்து வந்திருப்பதற்கு முக்கிய காரணம் முதலாளிகள் தங்கள் செல்வங்களை பெருக்கிக் கொள்வதற்கு ஆக ஒருவருடன் ஒருவர் தொடுத்த யுத்தங்களுக்கு ஆக ஏற்பட்ட செலவுகளே யாகும். யுத்த காலத்தில் ஏற்படும் அதிகமான செலவுகளுக்கு தேசத்திய வரி வரும்படிக்கு மேல் அதிக பணம் தேவையாகிறது. அப்போது ஜனங்களின் மீது யுத்தச்செலவுக்கு என்று அதிக வரி போடவேண்டியதாகிறது. அதுவும் போறாவிட்டால், தேசத்தின்மீது கடன் வாங்கி யுத்தத்தை நடத்த வேண்டியதாகிறது. (இந்தப்படி கடன் வாங்கியாவது யுத்தம் செய்ய வேண்டியது தங்களுடைய கடமை என்று முதலாளிகளின் அரசாங்கம் நினைக்கிறது.)

கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படும் காலங்களில் அரசாங்கத்திற்கு தாராளமாய் கடன் கொடுக்க செல்வவான்களுக்கு ஆசை உண்டாகும் மாதிரியில் விளம்பரம் செய்தால்தான் தாராளமாய் பணம் கடன் கிடைக்கக் கூடும். அதாவது பணக்காரர்கள் அரசாங்கத்திற்கு கடன் கொடுப்பதால் தங்களுக்கு அதிக லாபம் ஏற்பட்டு தங்களுடைய பணங்களை பெருக்கி விருத்தி செய்து கொள்ள நல்ல தருணம் என்று நினைக்கும்படியான அளவுக்கு வட்டியை கூட்டிக் கொடுப்பதாகவும், அதனால் இன்ன இன்ன விதத்தில் முதல்கள் விர்த்தியாகும் என்று எடுத்துக் காட்டி விளம்பரப் படுத்த வேண்டி இருக்கிறது. அரசாங்கத்திற்கு தேசத்தின் பேரால் தேசியக் கடனுக்கு என்று கடன் கொடுத்தவர்கள் எல்லாம் பணத்தாசையால்—சீக்கிரத்தில் தங்கள் பணத்தை பெருக்கிக் கொள்ளலாம் என்று ஆசைப்பட்டு கடன் கொடுத்தவர்களே ஒழிய, மற்றபடி தேசபக்தியிதோ அல்லது பொது நலத்தை உத்தேசித்தோ அல்லது பாடுபட்டு தொழில் செய்து வாழும் தொழிலாளி ஜனங்களின் நன்மையை உத்தேசித்தோ கடன் கொடுத்தவர்கள் அல்ல. (எப்படியெனில், காங்கிரஸ் பஹிஷ்காரத்துக்கு பஞ்சு, துணி, மில்முதலாளிகள் கடன் கொடுப்பது போலவும், வருணாச்சிரம தர்ம பிரசாரத்திற்கு பார்ப்பனர்கள் பணம் கொடுப்பது போலவுமே யாகும்) இந்தக் கடனானது சரீரத்தினால் வேலை செய்து வாழும் மக்களுக்குத் தான் என்றென்றைக்கும் தீர்க்க முடியாததும், தலைமுறை தலைமுறையாய் தொடர்ந்து வருவதுமான ஒரு பெரிய பளுவாக ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல் வேறு யாரையும் இது பாதிக்கிறதில்லை.

இந்த மாதிரியாக வாங்கப்பட்ட கடன்கள், கடன்கொடுத்தவர்களுக்கு வட்டி கொடுத்துக் கொண்டு வந்ததாலும், கடன்களை திருப்பித்திருப்பி அசலுக்கும் வட்டிக்கும் சேர்த்து எழுதிக்கொடுத்துக் கொண்டே வந்ததாலும், கூடுதலான மொத்தக்கடன் தொகைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் இன்று வருஷம் ஒன்றுக்கு வட்டி மாத்திரம் 31230000 மூன்றுகோடியே பனிரண்டு லக்ஷத்து முப்பது ஆயிரம் பவுன் (அதாவது 420000000 நாற்பத்தி இரண்டு கோடி ரூபாயாக) வட்டி கொடுத்து வரவேண்டியிருக்கிறது. வட்டி கொடுப்பதற்கு மாத்திரம் ஏற்பட்ட இவ்வளவு பெரிய தொகையையும் குடிகளிடமிருந்து வசூலிக்கும் வரி வருமானத்தில் இருந்து தான் கொடுத்துவர வேண்டியிருக்கிறது.

ஆகவே கடன் ஏற்பட்டதற்கு ஆதாரமான யுத்தங்களானது, குடிஜனங்களுடைய சாதாரண வரி வசூலிலிருந்து ஈடுசெய்ய முடியாததும் மேலும் மேலும் தேசியக்கடனுக்கு என்று வரித்திட்டங்களை உயர்த்திக் கொண்டேபோகவேண்டியதும், அதுவும் போறாமல் புதிய புதிய வரி மார்க்கங்களை கண்டுபிடித்து புதிய வரிகளைப் போட்டுத் தீரவேண்டியதுமான அவ்வளவு பெரிய செலவினமாக ஆகியிருப்பதுடன், அந்தப்படியான அதிக வரியாலும் புதிய வரியாலும் கூட மேல்படி கடன்கள் ஒழியாமல், மேலும் மேலும் பெருகிக் கொண்டு வந்து, அதாவது இவ்வளவு வரியும் சேர்ந்தும் அசலி ஒரு சிறு பாகத்தையும் குறைக்கப் பயன் படாமல் வட்டி கட்டவே கஷ்டப்படும்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.



சென்ற மாதம், சென்னை தியாகராய ஞாபகார்த்த கட்டடத்தில் தோழர் ஈ. வெ. ராமசாமிக்கு, தோழர் சுந்தரராவ் நாயுடு தலைமையில் நடந்த உபசாரக்கூட்டம்.

# "புரட்சி என்றால் என்ன?"

## ஏன் பயப்படவேண்டும்?

### ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

சென்ற 6—12—32ந் தேதி தோழர் T. D. கோபால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சுயமரியாதை இளைஞர்கள் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கட்கு வாசித்துக்கொடுத்த வரவேற்புப் பத்திரத்திற்கு தோழர் ராமசாமி பதில்.

தோழர் ஈ. வெ. இராமசாமிக்கு சென்ற 6-12-32 தேதி ஈரோடு சுயமரியாதை இளைஞர்கள் வாசித்துக்கொடுத்த உபசாரப்பத்திரம் வருமாறு:—

புரட்சி பொங்குக!

பொதுவுடைமை ஓங்குக!!

உலகில் சுயநலத்தாலும், எதேச்சாதிகார ஆணவத்தாலும், ஏழைகள், தொழிலாளர்கள் இரத்த வேர்வை சிந்தப்பாடுபட்டும், எந்நாளேனும் ஒருவேளை உணவேனும் வயிறார உண்டறியாது, பிரதி தினமும் பெண்டு பிள்ளைகளுடன் செத்துச் செத்துப் பிழைக்கும் சகிக்க முடியாக் கொடுமையினையும், ஊரார் உழைப்பில் உடல் சோர்வர் துண்டு ஏழைகளின் துயரறியக் கண்ணற்றும், கேட்கக் காதற்றும், இத்தகைய துயரினை ஒரு சிறிதும் உன்னாது உல்லாச வாழ்வு பெற்று உலவி வரும் முதலாளித்வமெனும் மிகக்கொடிய—நீதியற்ற—அக்கிரமமான நிலையை நிர்மூலமாக்கி "எல்லோரும் சரி நிகர் சமம்" உலகிலுதித்த ஒவ்வொரு மக்களும் மாண்புறும் மன்னரே என்னும் நேரிய நியதியை நிலைநாட்டும் தலைகீழ்ப் புரட்சியின் விருப்ப உணர்ச்சியினைப் பொதுவாய் உலகிற்கும், சிறப்பாய்த் தமிழ் நாட்டிற்கும் எடுத்தோதி எங்களைத் தட்டியெழுப்பிய தகைசால் தனிப் பெரும் வீர!

எத்துணை நாட்கள், எத்துணையாண்டுகள், எத்துணை யுகங்கள் இவ்வக்கிரம அநீதியை அறிந்தும் அமைதியாயிருத்தல் சாலும்? உலகிலே எங்கு நோக்கினும் ஐயோ பசி! ஐயோ பசி!! என்னும் பரிதாபக் கூக்குரல் வானளாவக் கேட்டும்—என்? என்று கேட்க ஆளற்று—இல்லை—விருப்பற்று வாய் மூடி மௌனியாய், மூகையாய் இருப்போரின் வாயினைத் திறக்கச் செய்யாது எத்துணை காலம் வாளாவிருக்க முடியும்? "பணம் படைத்துள்ளோம் பரம்பொருளால்" உழைத்துழைத்துச் சாகவே "ஏழையர் பிறந்தனர் எம்பிரானருளால்" என்றெண்ணி இறுமாந்திருக்கும் இக்கொடும் திமிரை, ஆணவச் செருக்கைத் தலைதெறிக்கத் தவிடு பொடியாக்கி ஏழையென்போர்களின் இழிதகைமையை, வயிற்றுக்கொடுமையை, வேலையில்லாதத் திண்டாட்டத்தைப் போக்கி இன்பவாழ்வெய்த வழி கோலாது எதிர்ப்புக்கும், முட்டுக்கட்டைக்கும் அஞ்சி எத்துணை நாட்கள் ஊக்கமற்று, உணர்ச்சியின்றி உறங்கிக் கிடத்தல் சாலும்!

தன்னயப் புரட்டினைத் தலைகீழாய்ப்புரட்டிய தனிப்பெரும்புரட்சியாள,

புரட்சி! புரட்சி!! புரட்சி!!! புரட்சி என்னும் சொல்லைக்கேட்குமளவில் புத்துயிர் தளிர்க்கும் புதுமையினை என்னென மொழிவோம். பொய்யையும், புனைசுருட்டையும், முதலாளித்துவத்தின் மோசடியையும், உயர் குலத்தார் எதிர்ப்பையும், எதற்கும் அஞ்சாது எட்டியுதைத்து, ஏழைகள் தம்மை ஏற்றமடையச் செய்ய, பொதுவுடைமையை நிலைநாட்டச் செய்ய "புரட்சி" ஒன்றே போதிய பலம் படைத்த வெடிகுண்டென்பதை இளைஞர் உலகம் என்றும் மறவா வகையில் எடுத்தியம்பிய எமதருந்தோழ! நீவிராற்றும் இப்பெரும் சமூகப் புரட்சியினை, உணர்ச்சி மிகுதியால் உதிரங்கொதிக்கும் யுவர்களாகிய யாங்கள் எத்துணை இடுக்கண் வரினும் மறப்போமல்லோம். எங்களுள்ளத்தினைக் கொள்ளை கொண்ட இப்புனிதப் "புரட்சியை" எங்களுள்ளத்தினின்று எவரே களைய வல்லார்? பலாட்டியப் பாலியர்களின் உணர்ச்சியை இனிப் பாழ்படுத்திவிட முடியாதென்பது திண்ணம்! திண்ணம்!!

விழிகண் குருடராய் வாழ்ந்திடும் மக்களை விழிகண் மக்களாய் வீறிட்டெழச்செய்த வீர!

இனியெவ்வாற்றானும் இந்நாட்டிடை—இல்லை—இவ்வுலகிடை "பணம் படைத்தோன்-பணமற்றோன்" எனும் பதமே கனவிலுங்கூட கண்டிடாவண்ணம் சமதர்மவகை செய்யும் முறையினைக் காலந்தாழ்த்தாது இளைஞருலகிற்கு எடுத்தியம்பினும் "மானுஷீக ஜீவகாருண்ய இயக்கத்தின்" பயனை விரைவிற் காணக் காலந்தாழ்த்தாது வழி காட்டுவது நம் தலைப்பெருங்கடமையாய்க் கொள்வீர்களென்பதில் யாங்களொட்டுணை ஐயப்பாடுங் கொண்டேமல்லேம்.

யாங்கள் விரும்புவதும் அதுவே! எங்குமுள்ள ஏழைகள் விரும்புவதும் அதுவே! மீண்டும் திகழும் இளைஞருலகம் விரும்புவது மதுவே! விரைவில் உலகில் திகழ்தர விரும்புவதும் அதுவே! சமதர்ம மனுஷீக ஜீவகாருண்ய உலகைக் காண்பதே இளைஞர்களாகிய எங்கள் இணையிலா விருப்பமென்பதனை ஆற்றல் செறிந்த அறிஞராம் நுங்கட்குரைக்கவிழைகின்றோம்.

தன்னலந் துறந்த பொதுநலப் பெரியோய்! ஈரோட்டில் மட்டுமல்ல உலகில் பல்வேறு பாகங்களினும் சென்று சமதர்ம ஒலியைக் கிளப்பிய இணையிலாக் கிழச் சிங்கமே!

மேற்கூறிய மேன்மை சால் கொள்கையினை, வெள்ளையர் அரசாட்சி வெட்டி அழித்துவிட நாடினும், கருப்பர் காங்கிரஸ் கல்லிவிடக் கருதினும், சுயநலம் படைத்த சோம்பேறிக் குருக்கள் சீறி விழுந்து சிதைக்க முயற்சிக்கினும், பணம் படைத்தோர் பதறியெழுந்து, பணப்பையைத் திறந்து படைதிரட்டிப் பயமுறுத்தினும், இன்னோர்க்குத் துணையான பணம், படை, பரம்பரைச் சட்டம், நிகழ்கால சட்டம், வருங்காலத்திட்டம், இன்னோரன்ன பல முட்டுக் கட்டைகள் எழுப்பினும் எதிர் வரவேற்று, ஆழக் குழியில் வீழ்த்தி, ஆழ்த்தி, ஆழி சூழுலகம் ஆனந்தமடைய எம்மனோர் விழைவு வீறிட்டெழும் என்னும் கோதிலா உண்மையைக் குவலயமெங்கும் உரைக்கவும் அதனால் வரும் இன்ப துன்பத்தை ஏற்று மகிழவும், துணிவும், வீரமும், தீரமும் கொண்டு விளங்கும்,

சுயமரியாதை இளைஞர்கள்,
ஈரோடு, 6—12—32.

---

ஈரோடு சுயமரியாதை இளைஞர்கள் வரவேற்புப் பத்திரத்திற்கு ஈ. வே. ராமசாமி பதில்:—

சுயமரியாதை உணர்ச்சி கொண்ட வாலிபத்தோழர்களே, இன்று நீங்கள் எனக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப்பத்திரத்திற்கு நான் உண்மையாகவே மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் இந்த உபசாரப்பத்திரம் உங்களுக்குள் தோன்றி ததும்பும் சுயமரியாதை உணர்ச்சியை முன்னிட்டே (நீங்கள் இதை) வாசித்துக் கொடுத்திருக்கிறீர்கள் என்று உங்கள் உபசாரப்பத்திர வாக்கியங்களில் இருந்தே உணருகிறேன்.

தோழர்களே! உங்கள் உபசாரப்பத்திரத்தின் தலைப்பிலே புரட்சி வாழ்க! பொதுவுடமை ஓங்குக! என்று குறிப்பிட்டிருக்கும் வார்த்தையைக் கண்டு அநேகர் எருதுக்கு முன்னால் சிகப்புத்துணியை விசிறினால் மிரண்டு மிரண்டு துள்ளுவதுபோல் பயப்படுவதாக தெரிகிறது. ஆனால் இவ்வளவு பயப்படத்தகுந்த காரண காரியங்கள் ஏதும் அவ்வார்த்தையில் அடங்கியிருப்பதாய் நான் கருதவில்லை.

ஆனால் அவ்வார்த்தையானது பயப்படத்தக்க முறையில் கற்பிக்கப்பட்டு விட்டது. எதுபோலென்றால் "பூச்சாண்டி" என்றால் அதற்கு அர்த்தம் இன்னதுதான் என்று தெரியாமலே குழந்தைகளை பயப்படுத்தி வைத்திருப்பது போல் உங்களில் அநேகரை புரட்சி என்றால் அதன் அருத்தம் என்ன? பயன் என்ன? என்கின்ற விஷயம் உணராமல் பயப்படும்படி செய்யப் பட்டாய் விட்டது.

### புரட்சி.

புரட்சி என்றால் என்ன? அது பயப்படவேண்டிய விஷயமா என்பதைப்பற்றி சற்று யோசித்துப் பார்ப்போம்.

சாதாரணமாக ஒரு மனிதன் ஒரு இடம் விட்டு மற்றொரு இடத்திற்கு போவதற்குத் தரையில் ஒரு மணிக்கு 3-மைல் வீதம் நடந்து கொண்டிருந்த நிலைமை மாறி, ஒரு மணிக்கு 400 மைல் ஆகாயத்தில் பறக்கும்படியான நிலைமை அடைய யோசிப்பானேயானால் நடக்கும் விஷயத்தில் அது ஒரு பெரிய பிரம்மாண்டமான புரட்சியேயாகும்.

இந்தப்படியான புரட்சியில் வெற்றி பெற்ற ஒருவன் ஆகாயத்தில் 1 மணிக்கு 400 மைல் பறக்கும்போது 3 மைல்வீதம் நடையிலேயே இருக்கிறவன் அதிசயப்படவேண்டியது தான். ஆனால் பயப்படுவதற்கு இதில் ஒன்றும் இல்லை; இதனால் யாருக்கும் எவ்வித கெடுதியுமில்லை. எந்த ஒரு காரியத்தையும் மனிதன் அவனுடைய வெகு நாளையப்பழக்கம், வழக்கம், நம்பிக்கை ஆகியவைகளுக்கு விரோதமாக ஆக்க முயற்சித்தால் அதை புரட்சி என்றுதான் சொல்லுவார்கள். ஆனால், அதனால் அனுகூலமடைகின்றவர்கள் அதை நன்மையான காரியம் என்று சொல்லிப் புகழவும், அதனால் தீமையடைகின்றவர்கள் அதைக்கெட்டகாரியம் என்று சொல்லி இகழவும், சரியான முறையில் எதிர்க்க சக்தி இல்லாதவர்கள தப்பர்த்தம் கற்பித்து மக்களுக்குள் புகுத்தி அதன்மூலம் எதிர்ப்பு ஏற்படச் செய்வார்கள். ஆனால் மனித சமூகத்தில் புரட்சி என்பது மிகச் சாதாரணமாய் இருந்து காரியத்தில் நடைபெற்றுதான் வருகின்றது. மனிதனுக்கு முற்போக்கு அறிவும், அக்கரையும் ஏற்பட ஏற்பட புதிய புதிய உணர்ச்சிகள் தோன்றத்தோன்ற மாறுதல்கள் என்கின்ற புரட்சிகள் உண்டாக்கிக்கொண்டேதான் இருக்கும். புரட்சிகள் என்றால் என்ன? ஒரு விஷயம் அதன் பழக்க வழக்க நிலையில் இருந்து மாற்றமடைவதும் அதிலும் அது அடியோடு தலைகீழ் நிலை அடையும்படி மாற்றமடைவதுமேதான் புரட்சி என்று சொல்லப்படுவதாகும். அந்தப்படி இப்போது நம் கண் முன்னாலேயே எவ்வளவோ புரட்சிகளை காதால் கேட்டுவிட்டோம் கண்ணால் பார்த்து விட்டோம். ஒவ்வொரு புரட்சியிலும் எந்தெந்த தேசம் பூமிக்குள் போய்விட்டது? எந்த சமூகம் பூண்டற்றுப்போய்விட்டது? மாறுதலேற்படும்போது சற்று தடபுடலாய் மக்கள் மிரளுவதும், சிறிது நாளானவுடன் அது இயற்கையாய் ஆகிவிடு

வதும், பிறகு அதிலிருந்து மற்றொரு புரட்சி ஆரம்பிப்பதும் சகஜந்தானே. சாதாரணமாக அரசியல் துறையில் ஏற்பட்ட புரட்சியை எடுத்துக்கொள்ளுங்கள். நமது நாட்டில் அரசர்களெல்லாம் "கடவுள் அவதாரங்களல்லவா, கடவுள் அம்சங்களல்லவா, கடவுள் அருள் பெற்றவர்களல்லவா? கடவுள் கடாட்சம் பெற்றவர்களல்லவா" இதுதானே அரசனைப்பற்றிய நமது சாஸ்திரங்கள் என்பவைகளும் புராணங்கள் என்பவைகளும் சொல்லப்பட்ட சத்தியவாக்கு? சமீப காலம்வரை நாம் அரசரை விஷ்ணு அம்சம் என்று சொல்லிக்கொண்டிருக்கவில்லையா? அரசர் கடவுள் அவதார அம்சம் என்பதாகக்கூறிக் கொண்டும் புராணங்கள் படித்துக் கொண்டும் இருக்கவில்லையா? இன்றும்பலர் அம்மாதிரி படித்துக்கொண்டிருக்கிறார்களா? இல்லையா? ஆனால் நாம் இப்போது என்ன சொல்லுகிறோம்? மனிதசமூகத்திற்கு அரசன் எதற்கு? என்றுகேட்கும் நிலைமைக்கு வந்துவிடவில்லையா? எங்களுக்கு ஒரு சக்கரவர்த்தியோ அரசனோ இருப்பது எங்கள் சுயமரியாதைக்கு குறைவு என்று சொல்ல வந்துவிட்டோமா? இல்லையா? ராஜபக்தி, ராஜவாழ்த்து அடிமைத்தனம் என்று சொல்லவந்துவிட்டோமா? இல்லையா? அந்தப்படியே பல தேசங்களில் அரசர்கள் ஒழிந்தும்விட்டார்களா? இல்லையா? ஆகவே அரசியல் துறையில் இது ஒரு பெரிய புரட்சியா இல்லையா? என்று உங்களைக் கேட்கின்றேன். இந்த புரட்சியால் என்ன ஆபத்து வந்துவிட்டது? எந்ததேசம் மண்ணில் புதைந்துவிட்டது? யார் வாய் வெந்துபோய்விட்டது? யார் தலை போய்விட்டது? அரசர்கள் ஒழிக்கப்பட்ட தேசம் நெருப்புப்பற்றி எரிந்துவிட்டதா? அல்லது பாலைவனமாகிவிட்டதா? சுமார் 40, 50 வருஷங்களுக்கு முன் அரசாங்கத்தைக்குறை கூறவோ, மாற்றவோ யாராவது நம் நாட்டில் கருதியிருப்பார்களா என்று யோசித்துப்பாருங்கள். எந்தப்புராணத்திலாவது, சாஸ்திரத்திலாவது அரசன் வேண்டாம் என்று சொன்னதாகப் பார்த்திருக்கிறோமா? இன்று எப்படி தைரியமாய்ச் சொல்ல வந்துவிட்டோம்? இது ஒரு பெரிய புரட்சியா அல்லவா என்று யோசித்துப் பாருங்கள். இதுபோலவே மக்களில் ஒரு சாராரை "பூதேவர்கள்" (இந்த உலகக் கடவுள்கள்) என்றும் மற்றொரு சாராரை கண்ணிலும் பார்க்க முடியாதவர்கள் என்றும், சண்டாளர்கள் என்றும் கருதியிருந்தோமா இல்லையா? இதற்கு வேத சாஸ்திர புராண ஆதாரங்கள், கடவுள் வாக்குகள் இருக்கின்றது என்று சொல்லி "பூதேவர்கள்" காலில் விழுந்து கும்பிட்டும் "சண்டாளர்களை" தெருவில் நடக்க விடாமல் துரத்தி அடித்தும் வந்தோமா இல்லையா? ஆனால் இன்று அவர்களைத் தெருவில் மாத்திரம் அல்லாமல் கோவிலுக்குள் கூட்டிக்கொண்டு போக வேண்டும்" என்று சொல்லுகின்றோமா இல்லையா? இப்படிச் சொல்லுகின்றவர்கள் "மகாத்மா" என்று அழைக்கப்படுகிறார்களா இல்லையா?

மற்றும் இம்மாதிரி "சண்டாளர்கள்" கண்ணுக்கே தென்படக் கூடாது, கிட்டவே வரக்கூடாது என்று இருந்ததெல்லாம் போய் இப்போது அவர்கள் பக்கத்தில் போய் உட்கார ஆள்மேல் ஆள்கள் போட்டி போட்டு அய்யங்கார், சாஸ்திரிகள், ருஷிக்கள், பண்டாரசன்னதிகள், பட்டக்காரர்கள் ஆளுக்கு 10 ஆயிரம் 15 ஆயிரம் ரூபாய்கள் (தேர்தல்களில்) செலவு செய்து அந்த ஸ்தானங்களை அடைய முயற்சிக்கிறார்களா இல்லையா? சமூக வழக்கங்களில் 10 வயது பெண்ணைக் கட்டிக்கொடுக்கா விட்டால் பெற்றோர்கள் "நரகத்துக்கு"ப் போய் விடுவார்கள், பெண்ணும் விபசார தோஷத்திற்கு ஆளாய்விடும் என்று கூறிய வேத சாஸ்திரங்களையும், "ரிஷிகள்" வாக்கியங்களையும் பழக்க வழக்கங்களையும் குப்பையில் தள்ளிவிட்டு 14 வயதான பிறகு, பெண் ருதுவான பிறகுதான் கல்யாணம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் தண்டனை அடையவேண்டும் என்று சொல்லி சட்டம் செய்துவிட்டோமா இல்லையா?

எனவே இவைகள் எல்லாம் சமூகப்புரட்சியேயாகும். இதனால் யாருக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? யார் என்ன கஷ்டப்படுகிறார்கள்?

ஆகவே அரசியல் துறையிலும் சமூகத்துறையிலும் எவ்வளவுபுரட்சிகள் செய்ய முன்வந்து விட்டோம்—செய்தும் விட்டோம். இவைகள் எவ்வளவு சர்வ சாதாரணமான விஷயமாகவும் மிகவும் ஞாயமானதாகவும் அறிவுடைமையாகவும் மக்கள் சமூகத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் கருதப்படுகின்றது என்பதைக் கவனித்துப்பாருங்கள்.

மற்றும் "உலகத்தையே படைத்துக்காக்கும் கடவுள்" விஷயம் இன்று உலகில், நம் நாட்டில் என்ன பாடுபடுகின்றது? அக்கடவுளையடையும் மார்க்கமாகிய மத விஷயம் இன்று என்ன பாடுபடுகின்றது? இவைகள் கடவுள் புரட்சி மதப்புரட்சியல்லவா? இதனால் மக்களுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? ஆகவே இவ்விஷயங்களில் ஆபத்து, ஆபத்து என்று சொல்லப்படுவதெல்லாம் நன்றாய் யோசித்துப் பார்த்தால் அவற்றால் யார்யார் நன்மை அடைந்துவந்தார்களோ அவர்களுக்குத்தான் சிறிது ஆபத்தாய் காணப்படுகின்றதே அல்லாமல் வேறு என்ன? இவர்கள் யார்? இவர்கள் மக்கள் சமூகத்தில் நூற்றுக்கு எத்தனைபேர்கள்? என்று பார்த்தால் லட்சியம் செய்யக்கூடிய அளவா என்பது விளங்கும். ஆகவே அரசியல், சமூக இயல் அறிவியல் ஆகியவற்றில் பெருத்த புரட்சிகள் ஏற்பட்டு அவை சாதாரணமாய் நடந்து வருகின்றதை நீங்கள் பார்க்கிறீர்கள். எனவே மேற்கண்ட புரட்சிகள் போல் அதாவது அரசன் என்? உயர்ந்த ஜாதி என்? தாழ்ந்த ஜாதி என்? கடவுள் என்? மதம் என்? என்று சொல்லுவது போலவே இப்போது பணக்காரன் என்? பிரபு என்? முதலாளி என்? ஏழை என்? அடிமை என்? என்று கேள்க்கின்றோம். இந்தப்படி என் கேட்கின்றோம்? முதன் முதலில் ஏதோ ஒரு விஷயத்தில் மாறுதலையடையத் துணிந்துவிட்டோம், அதற்கு ஏற்பட்டிருந்த கட்டுப்பாடு காவல் ஆகியவைகளை அலட்சியம் செய்துவிட்டோம். அதே தைரியமும், அதே அறிவும், அதே அவசியமும், அதே முற்போக்கு உணர்ச்சியும் அதற்கு அடுத்த நிலைமைக்கு மக்களைத் தானாகவே கொண்டு போகின்றது.

பட்டாளம், பீரங்கி, ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, 20 மைல் பீரங்கி விஷப்புகை, வெடி முதலிய பலமும் 'கடவுள் அவதாரமும்' உள்ள அரசனை, நீ வேண்டாம் மூட்டை கட்டிக்கொள், என்று சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டு அது நியாயமும் அவசியமும் என்று தோன்றி பல அரசர்கள் ஒழிக்கப்பட்டும் போன பிறகு, அதைவிட கஷ்டமானதும் நினைக்க முடியாததுமான காரியமா இந்தப்பணக்காரன் என்? ஏழை என்? என்று கேட்கும் விஷயம் என்றுதான் கேட்கிறேன். முன்னையதைவிட இதற்கு என்ன அதிக தைரியம் வேண்டும்? என்ன அதிக பலம் வேண்டும்? அல்லது இது என்ன ஒரு பெரிய பாவமான காரியமாகும்? அரசன் ஜாதி, கடவுள், மதம், பழக்கவழக்கம் ஆகியவையெல்லாம் பணக்காரனையும், பார்ப்பானையும், காப்பாற்ற ஏற்பாடு செய்து கற்பித்து வைத்த சாதனங்களேயொழிய இவர்கள் இயற்கையா? காற்றைப்போல் இன்றியமையாததா? எப்பொழுது அவைகளுக்கே ஆபத்து வந்துவிட்டதோ அப்பொழுதே பணக்காரர்கள் நிலை காவலில்லா சொத்து காணாமல்போவதுபோல் மறைவுபடவேண்டியதுதானே? இதனால் யாருக்கு என்ன நஷ்டம்? உண்மையான நடுநிலைமையும் அறிவும் இருக்கிறவன் இதை எப்படி குற்றம் என்று சொல்ல முடியும்?

இது சாதாரணமாய் அறிவும் முற்போக்கு உணர்ச்சியும் உள்ளவனுக்கும் தோன்றக் கூடிய காரியம்தானே? இதை வெளியில் சொல்லுவது தப்பு—சட்ட விரோதம் என்று மிரட்டினால் சிலர் வேண்டுமானால் வாயில் சொல்ல பயப்படுவார்கள். ஆனால் இது அவர்கள் மனதில் உதிக்கக்கூடாது என்று சொல்ல முடியுமா? ஒரு சமயம் சிலர் இது சாத்தியப்படுமோ? என்று கேட்கலாம் இப்படி கேட்பது வேறுவிஷயம். ஒரு விஷயம் சரியா தப்பா என்று கவனித்தபிறகுதான் அது சாத்தியப்படுமா என்கின்றதைப் பற்றியோசிக்க வேண்டும்.

### சாத்தியப்படுமா?

அரசன் வேண்டாம் என்கின்ற விஷயத்தை நாம் அசாத்திய விஷயம் என்று கருதுகின்றோம்? அரசனுக்கு உள்ள படை, பட்டாளம், வெடிகுண்டு, பீரங்கிகளை யெல்லாம்விட இந்தப்பணக்காரனுக்கும் முதலாளிக்கும் என்ன அவ்வளவு பலமான காவல் இருக்கின்றது? அரசனைவிட பணக்காரனுக்கு என்ன அவ்வளவு அதிகமான வேதசாஸ்திர புராணப் பாதுகாப்புகள் இருக்கிறது? அவர்கள் நிலைமையே இப்போது காற்றாய்ப் பறக்கின்றது. பணக்காரர்கள் நிலைமைக்கு என்ன பலுவு இருக்கிறது? வரிசைக்கிரமத்தில் இவர்கள் நிலைமையும் மாற்றமடைய வேண்டியது தானே? சும்மா சமய சந்தர்ப்பம் இல்லாமல் அரசனையும், பார்ப்பானையும் திட்டி ஊரார் மெச்சும்படி பேசி கடவுளையும் மதத்தையும் பரிகாசம் பண்ணிக்கொண்டு இருப்பதுதான் சுயமரியாதைக்கட்சியின் லக்ஷியமா? என்று யோசித்துப் பாருங்கள்.

ஒரு மனிதனின் சுயமரியாதை உணர்ச்சிக்கு எது எது பாதகமாய் காணப்படுகின்றதோ அவைகளையெல்லாம் மாற்றுவது தான் உண்மையான சுயமரியாதை இயக்கத்தின் நோக்கமாகுமே தவிர அரசனுக்குப் பதிலாக பார்ப்பானை ஏற்றிவைப்பதும் பார்ப்பானுக்குப்பதிலாகபணக்காரனைப் பட்டத்தில் வைப்பதும் ஒருநாளும் சுயமரியாதையாகாது; இவையெல்லாம் சுயநலமரியாதையேயாகும்.

அன்றியும் அரசன் வேண்டாம் என்றாலும், பார்ப்பான் வேண்டாம் என்றாலும், பணக்காரன் வேண்டாம் என்றாலும் இதனால் கஷ்டப்படும் மக்கள் 100க்கு 10 பேர்கள் கூட இருக்கமாட்டார்கள். இவை ஒழிந்தால் சுகப்படும்மக்கள் 100க்கு 90 பேர்களுக்குமேல்இருப்பார்கள். ஆகவே யாருடைய நன்மைக்கு ஏற்ற காரியம் செய்யப்படவேண்டியது அறிவாளியின் கடமை என்பதை சிந்தித்துப் பாருங்கள். உண்மையான ஜீவகாருண்யம் உள்ளவர்கள் வெறும் கோழியைத் தலைகீழாய் கொண்டுபோகப் படுவதையும், மாட்டின் கழுத்தில் ஒரு சிறு புண் இருப்பதையும் ஜீவகாருண்யம் என்று எண்ணமாட்டார்கள். பெரும்பான்மையான மக்கள் வெகு சிறுபான்மையோரின் சுயநலத்தால் எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள் என்பதைத்தான் கவனிப்பார்கள்.

"ஐயோ இந்தப்புரட்சியால் பணக்காரர்களின் மனம் பதருமே" என்று ஒரு அறிவாளியும் கருதமாட்டான். எப்படியெனில் ஒரு திருடனுக்காகப் பயந்து 100 பேர்கள் தங்கள் வீட்டுக் கதவைத் தாளிட்டுப்படுத்துக் கொண்டால் திருடன்பாடு பட்டினிதான். அதனால் "திருடன் மனம் பதருமே—ஏமாற்றமடைய நேரிடுமே—அவன் பிள்ளை குட்டிகள் பதறுவார்களென்று

சொல்லி எல்லோரும் கதவைத் திறந்து போட்டே படுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னால் இதை ஜீவகாருண்ய மென்று நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்களா? பெரிய மாறுதல்கள் உண்டாக்கப்பட வேண்டிய அவசியங்கள் ஏற்பட்டால் குறுகிய நோக்கக் காரர்களும் சுயநல நோக்கக்காரர்களும் சிலசமயங்களில் மனக் கஷ்டப் படத்தான் நேரும் அதற்கு யார் என்ன செய்ய முடியும்? எலியும் பூனையும், பாம்பும், தேளும் போகின்ற கோவிலுக்குள் மனிதர் போவதானால் எத்தனை சங்கராச்சாரிகள் மனம் பதருகிறது? இதில் எதாவது நாணயமோ உண்மையோ இருக்க முடியுமா?

இதற்காக எவ்வித பலாத்காரமும் செய்துதான் ஆகவேண்டும் என்பது நமது கருத்தல்ல. ஆனால் பலாத்காரத்துக்கு பலவந்தமாய் வருபவர்களிடமிருந்து எப்படி மீளவேண்டுமோ அதற்கு தயாராய்த்தான் இருக்க வேண்டும்; இதற்காக எந்தப்பணக்காரரும் கஷ்டப்பட வேண்டியிருக்காது; யாரும் பட்டினி கிடக்க நேராது. நல்லுணர்வு ஏற்பட்டு விட்டால் இது ஒரு நொடியில் முடியக்கூடிய காரியமே யாகும்.

உலகில் பொருளாதார நெருக்கடியினால் ஏழைகள் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் பணக்காரர்களும் முதலாளிகளும் மாத்திரம் சுகப்படுகிறார்கள் சந்தோஷப்படுகிறார்கள் என்று சொல்லிவிட முடியுமா? ஒவ்வொரு கருத்துள்ள பணக்காரனுக்கும் இருக்கின்ற கவலை உங்களுக்கு தெரியாததா? அவன் அதை சம்பாதிக்கும் வழியில் கஷ்டப்படுவதை விட கவலைப் படுவதை விட அதிகமாகவே அதை காப்பாற்றுவதிலும் கவலைப் படுகிறான்; லாபநஷ்டம் வரும் காலையிலும் அதிக லாபம் வரவில்லையே என்றும் நஷ்டம் வந்து விட்டதே என்றும் தான் கஷ்டப்படுகிறான். எவ்வளவு இருந்த போதிலும் இன்னும் பொருள் சேரவேண்டுமென்றே ஆசைப்படுகிறான் கவலையும் பொறுமையும் அவனுக்கு சமமாகத்தான் இருந்து; வருகின்றது எவ்வளவோ கஷ்டங்களையும், தொல்லைகளையும் சகித்துக்கொண்டும் பெருங்கவலைக்கு ஆளாய்க்கொண்டும் தான் தன்னை பணக்காரன் என்று பிறர் மதிக்க வேண்டுமென்று கருதுகிறான். இதனால் உண்மையில் லாபம் ஒன்றுமில்லை. ஆனால் உலகத்தில் உள்ள பழக்கம் வழக்கம் பெருமையின் முறை ஆகியவைகளுக்கு அடிமைப்பட்டே பணக்காரனாக ஆசைப்படுகிறான். ஆகவே பணக்காரத்தன்மை என்பது போய் விடுவதால் மனித சமூகத்துக்கு ஒரு கஷ்டமும் வந்து விடாது; பணக்காரத்தன்மை போய்விட்டால் எல்லா மக்களின் நன்மையைப் பொருத்த காரியங்களை யெல்லாம் கவனிக்க வேண்டிய சமதர்மக் கொள்கை கொண்ட ஆட்சிதான் நடைபெறும்.

மனித சமூகத்தின் கஷ்ட நிலைமைக்கும், இழிதன்மைக்கும், ஒப்பற்ற தன்மைக்கும், சதாகவலைக்கும் காரணமாயிருப்பதே இந்த பணக்காரத்தன்மையும், ஏழ்மைத்தன்மையுமேயாகும்.

மனிதப்பிறவி உயர்ந்த தென்றும், அருமையான தென்றும் மற்ற ஜீவராசிகளைவிட மேம்பட்ட அறிவின் பயனை அனுபவிப்பதென்றும் சொல்லுகிறார்கள். நான் அதை ஒப்புக் கொள்ளமுடியாது.

இன்றைய மனித சமூகத்திட்டம் சரியென்று ஒப்புக் கொள்வதனால் "அறிதறிது மானிடராய்ப் பிறத்தலறிது'' என்பது சோம்பேரிகள், பகுத்தறிவற்றவர்கள் ஆகியவர்களின் ஞானம் என்று சொல்ல வேண்டியிருப்பதோடு நான் "இழிவு இழிவு மனிதராய்ப் பிறத்தல் இழிவு'' என்று தான் சொல்லுவேன். மனிதப்பிறப்பின் இழிவுக்கும், கஷ்டத்திற்கும் அவனது இன்றைய வாழ்க்கை திட்டமே காரணமாய் இருக்கிறது; மனிதனை விட மற்ற ஜீவப்பிராணிகளில் தன் இனத்தை அடிமை கொண்டு வருத்திவதைத்து வாழ்கின்ற ஜீவன் மிக அபுருபமே யாகும்.

மனிதனைவிட மற்ற ஜீவப்பிராணிகளில் நாளைக்கு என் கதி என்ன? என் பிள்ளை குட்டி பேத்தி பிதிர் ஆகியவர்களுக்குஎன்ன கதி? உலகம் உள்ள நாள் வரை நானும் என் சந்ததியும் உலகிலுள்ளவர்களுக்கெல்லாம் மேலாய் வாழ்வதற்கு என்ன மார்க்கம் என்று கருதி தன் சமூகத்தையோ சகலவித அயோக்கியத் தனங்களாலும் வதைத்து நலம் பெரும் ஜீவன்கள் மிக மிக அருமையாகவே இருக்கும்; மனித சமூகத்தாலேயே எதை எதை இழிவான, கொடுமையான குணம் என்று கருதுகின்றோமோ அவையெல்லாம் உலகிலுள்ள எந்த இழிவான ஜீவன் என்று சொல்லப்படுவதை விட மனிதனிடத்திலேயே அதிகமாய் இருக்கின்றது. கழுதை மேல் கழுதை சவாரி செய்கின்றதா? புலிமேல் புலி சவாரி செய்கின்றதா? பாம்பு தேள் ஆகியவைமேல் பாம்பு தேள் சவாரி செய்கின்றதா? ஆனால் மனிதன் மேல் மனிதன் செய்கிறானா இல்லையா! ஆகவே மனிதனிடம் என்ன உயர்வான குணங்கள் இருக்கக் காண்கின்றோம்?

அரசன், ஜாதி, மதம், கடவுள், பணக்காரன் ஆகிய தன்மைகள் எல்லாம் மேல்கண்ட இழிதன்மைக்கும், அக்கிரமத் தன்மைக்கு மனிதஜீவகாருண்யமற்றதன்மைக்கும் அனுகூலமாய் இருக்கின்றதா' இல்லையா?

மனிதன் தனது சமூகத்தை வஞ்சித்துப்பொருள் சேர்த்து "பகுத்தறிவுள்ள'' தனது பெண்டு பிள்ளைக்கு பணம் சேர்த்து வைக்க வேண்டுமென்று சொல்லுகிறான். ஆனால் மிருகம், பக்ஷி ஆகியவைகள் பகுத்தறிவு இல்லாத தனது பெண்டு பிள்ளைகளுக்குச் சொத்து சேர்த்து வைக்க கருதுவதில்லை. தனது குட்டிகளையும், குஞ்சுகளையும் அவை தானாக ஓடியாடும் பருவம் வந்தவுடன் தனித்து வாழ்ந்து கொள்ளும்படி கஷ்டத்தும் கொத்தியும் துரத்தி விடுகின்றது. அவற்றைப்பற்றியகவலையோ ஞாபகமோ கூட அவைகளுக்குக் கிடையாது.

மனிதனின்பிறப்பு கடவுளால் என்கிறோம். இறப்பு கடவுளால் என்கிறோம். இவ்விரண்டுக்கும் காரணமாய்க் காணப்படுவது மனிதன் நடப்பாய் இருப்பதால் அந்த நடப்பும் கடவுளால் தான் என்று சொல்லவேண்டியதாகின்றது.

ஆகவே மனிதனின் நடப்பையும் கடவுளால் தான் நடைபெறுகின்றது என்று சொல்லுகிறார்கள். மனிதனுடைய நடப்போ பெரிதும் நான் மேலே சொல்லியது போலவே தான் கவலையும் கொடுமையும் நிறைந்ததாய் இருந்து வருகின்றது. இப்படிப்பட்ட நடப்புக்குக் கடவுளைக் காரணமாக்குகின்றவர்கள் இதன் பயனாகிய பிறப்பு இறப்புக்கு கடவுளை காரணமாக்குகின்றவர்கள் கடவுளை மேன்மைப்படுத்தினவர்களா? அல்லது கீழ்மைப்படுத்தினவர்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

செல்வவான் (சோம்பேரியாயிருந்து வாழ உரிமையுடையவன்) என்கின்ற ஒரு நிலைமை உலகில் இல்லையானால் கடவுளுக்கும் மதத்திற்கும் ஜாதிக்கும் அரசனுக்கும் உலகில் இடம் இருக்குமா என்று யோசித்துப்பாருங்கள்.

(தொடரும்)

# இங்கிலாந்தில் ஈ. வெ. ராமசாமி பிரசங்கம்.

## தொழில்கட்சியின் போலித்தன்மை.

—:0:—

இக்கூட்டமானது மேக்ஸ்ப்ரோ (பாங்கிலே) லேக்பார்க்கில் 20—6—32ந்தேதி கூடியது. கூட்டத்தில் சுமார் இருபது முப்பது ஆயிரம் பேர்கள் இருந்தார்கள். பக்கத்தில் பிரிட்டிஷ் தொழில் கமிட்டி தலைவர் தோழர் லான்ஸ்பரி அவர்கள் பேசினார் அதற்கு பதில் என்கின்ற முறையில் தோழர் ஈ. வெ. ராமசாமியால் இந்த உபந்யாசம் செய்யப்பட்டதாகும்.

அதாவது:-

தோழர்களே!

இந்தியர்களாகிய எங்களை நீங்கள் ஒரு பரிகசிக்கத் தகுந்த சமூகமாகக் கருதலாம். ஆனால் நாங்கள் பிரிட்டிஷ் தொழில்க்கக்ஷியை மிகமிகப் பரிகசிக்கத் தக்க விஷயமாய் க்கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஏனெனில் தொழில் கக்ஷித்தலைவராகிய தோழர். லான்ஸ்பரி அவர்கள் சிப்பாய்கள் சுடுவதையும், கொல்லுவதையும் தாம் சிறிதும் விரும்பவில்லை என்று பெருமை பேசிக்கொள்ளுகிறார். ஆனால் எங்கள் கார்வாத் (Gharwath) சேனைகள் நிராயுதபாணிகளான மக்களைச் சுடுவதற்கு மறுத்ததற்காகத் தோழர். லான்ஸ்பரியின் தொழிற் கக்ஷி கவர்ன்மெண்டானது அந்தச் சிப்பாய்களுக்கு 15—15 வருஷ கடின காவல் தண்டனை விதித்திருக்கிறது என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

2. தொழிலாளர் சங்கமாகிய டிரேட் யூனியனை ஆதரிப்பதாகவும், அதில் சேர்ந்து உழைப்பதாகவும் பறை சாற்றுகிறீர்கள். ஆனால் எங்கள் ஏழை இந்திய சுரங்க வேலைக்காரர்களும் மற்ற தொழிலாளிகளும், சேர்ந்து ஒரு டிரேட் யூனியன் சங்கம் ஸ்தாபித்ததற்காக அதன் அதிகாரிகளையும், அதற்கு உதவிசெய்த பிரிட்டிஷ் தோழர்களையும் வெளியில் இருக்க விடாமல் உங்கள் தொழில் கக்ஷி அரசாங்கமானது மீரத்து சிறையில் அடைத்துப்போட்டு விட்டது.

3. தோழர். லான்ஸ்பரி அவர்கள் இந்தியர்கள் விஷயத்தில் மிக்க அனுதாப மிருப்பதாகவும், இந்தியர்கள் சுடப்படுவதையும், அடிக்கப்படுவதையும், சிறையில் அடைக்கப் படுவதையும் தாம் விரும்புவதில்லை என்றும் சொல்லிக்கொள்வதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் தோழர் லான்ஸ்பரியுடைய தொழில் கக்ஷி அரசாங்க கேபினட்டானது சுமார் 80000பேர் வரை இந்திய ஆண் பெண்களை ஜெயிலில் அடைத்திருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்களை சுட்டு தள்ளிக் கொண்டிருக்கிறது.

ஆப்ரிடிகன் கிராமங்களின் மீது ஆயிரக்கணக்கான தடவை ஆகாயப் படை மூலம் கொடுமை செய்யப்பட்டிருக்கிறது.

நூற்றுக் கணக்கான பர்மியர்களையும், கிராமத்தாரையும் சுட்டுக் கொன்று இருக்கிறார்கள். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

4. இந்திய சுரங்கங்களில் 10 மணி நேரவேலைக்கு 8-அணு கூலிக்கு இந்தியர்களிடம் வேலைவாங்கப்படுகின்றது. சுமார் 40 ஆயிரம் பெண்கள். தினம் ஐந்தணு கூலிக்கு பூமிக்குள் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இந்த கொடுமையையும் ஆபாசத்தையும் நிறுத்த தொழில் கட்சி அரசாங்கம் என்ன செய்தது?

5. தோழர் லான்ஸ்பரி அவர்கள் இங்கிலாந்தில்தொழிலாளிகளை ஆதரிக்கவேண்டும்என்றுபேசுகிறார். ஆனால்

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க

# குடி அரசு.

ஈரோடு 1932 டிசம்பர்மீ 18-உ

## சங்கராச்சாரியும், காந்தியும்.

——:0:——

உலக மக்கள் அறிவு விருத்திக்கும், ஒற்றுமைக்கும் சமூக பொருளாதார சமத்துவத்திற்கும், விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும் பரம விரோதிகளாயிருப்பவர்கள் மதத்தலைவர்களும், மத நம்பிக்கைகொண்ட ஜனத்தலைவர்களுமேயாவார்கள். இவர்களதுசூட்சிகள் தான் உலகமக்கள் ஒற்றுமையைப்பிரித்து, சின்னபின்னமாக்கி, வலுத்தவன் இளைத்தவனை வதைத்து, அவனது இரத்தத்தை உறுஞ்சி வாழும் முறையை நிலைநிறுத்திவருகிறது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்துமதத்தலைவராகிய போப்பும், அவரது சிப்பந்திகளாகிய பாதிரிக்கூட்டமும் இல்லாதிருக்குமானால் உலகஇயற்கைவிஷயங்களில்எவ்வளவோ முற்போக்கு பெற்றுள்ள ஐரோப்பியர்கள் இம்மாதிரி காடு பிடிக்கும் நாட்டு வெறியும், உலக செல்வங்கள் தங்கள் தங்கள் நாடுகளுக்கே வரவேண்டும் என்கின்ற செல்வ வெறியும், அந்தப்படி பல நாடுகளை கொள்ளை கொண்டும் பல தேச மக்களை வதைத்தும் தேடிய பொருள்களை அந்நாட்டு ஏழை மக்களுக்குப் பயன்படுத்தாமல் தாங்கள் (ஒரு சிறு கூட்டம்) மாத்திரமே அனுபவிக்கும் குணமும் ஏற்பட்டிருக்க நியாயமிருக்காது.

அதுபோலவே ருஷியா தேசத்திலும் "மகாத்மா" டால்ஸ்டாய் என்கின்ற ஒரு மத நம்பிக்கை கொண்ட மனிதர் போன்றவர்கள் ஜனத்தலைவராயில்லாதிருந்தால் அந்நாடு வெகுகாலத்திற்கு முன்னதாகவே அதன் பழைய காட்டுமிராண்டித் தன்மையில் இருந்து மீண்டிருக்கும்.

நம் இந்திய நாட்டின் இன்றைய நிலையைப்பற்றியும் யோசிப்போமேயானால், மேல்கண்ட முட்டுக்கட்டைகள் போலவே மதத்தலைவர்கள் என்னும் சங்கராச்சாரிகள் போன்ற கூட்டத்தாராலும், ஜனத்தலைவர் என்னும் "மகாத்மா" காந்தி போன்றாராலும் இன்றுவரை இந்திய நாடு காட்டுமிராண்டித்தன்மையில் இருந்து மீளவகையின்றித் தத்தளிக்கின்றது.

ருஷியாவின் முன்னேற்றத்திற்கு, அதாவது அதன் காட்டுமிராண்டித்தன்மையிலிருந்து விடுபட, டால்ஸ்டாய் எப்படி கடவுள் பெயரையும், மதத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு முட்டுக்கட்டையாயிருந்தாரோ அதேபோல், ஏன்? இன்னும் அதைவிட மோசமாக தோழர் காந்தியின் நாடகத்தால் இந்தியா இன்னும் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முந்தியகாட்டுமிராண்டித் தன்மைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றது. மனித சமூகத்திற்கு மௌடீகத்தன்மைஅதாவது தெளிவு இல்லாமல்குழப்பமடைந்து கொண்டிருக்கும் தன்மை பெரிதும் கடவுளையும் மதத்தையும் பற்றியதேயாகும். அந்த இடத்தை நன்றாய் அறிந்து அதை உபயோகப்படுத்திக்கொள்ள வகை தெரிந்தவர்கள் யாராயிருந்தாலும் எவ்வளவு சாதாரண—உண்மையற்ற—நிலையற்ற—பயனற்றமனிதராய் இருந்தாலும் அவர்கள் எதாவது ஒரு வகையில் வெற்றி பெற்றே தீருவார்கள்.

அந்த முறையில் தான் இன்று இந்தியாவானது தோழர் காந்தி கையிலும், சங்கராச்சாரி கையிலும் சிக்கிக்கொண்டு சித்திரவதை செய்யப்பட்டு வருகின்றது. "தொட்டது தொண்ணூறிலும் தோல்வியடைந்த தோழர் காந்தி, இன்று மக்கள் கவனத்தை கோவிலுக்குத் திருப்பிக் கடவுள் பிரசாரத்தை ஆரம்பித்து விட்டு மக்களுக்கு கடவுள் வெறியை உண்டாக்கி வருகிறார். அவரது சிஷ்யகோடிகள், அதாவது அவரது நாடகத்தில் பாத்திரர்களாயிருந்து பிழைத்துத் தீரவேண்டியவர்கள்—புகழுடையவேண்டியவர்கள் எல்லோரும் திருப்பதி உண்டியல்காரர்கள் போல் "பகவான்" நாமத்தை ஸ்மரணை செய்வதிலும் "அவரது பெருமையை" காலக்ஷேபம் செய்வதிலும், ஒருபுறம் பெருத்த பிரசாரம்செய்கிறார்கள். மற்றொரு புறத்திலோ சங்கராச்சாரியாரும், அவரது கூட்டமாகிய பார்ப்பனகோஷ்டியும், கரைபுரண்டோடும் காட்டு வெள்ளம்போல் மதப்பிரசாரமும், சாஸ்திரப்பிரசாரமும்செய்கின்றார்கள். "தமிழ்நாடு" "காந்திஆகிய" இரண்டொரு பத்திரிகைகள் தவிர மற்ற "தேசிய" பத்திரிகைகளும், "தேசிய" வாதிகளும், "தேச"பக்தர்களும், எப்படியாவது தங்களுக்கு வயிற்றுப்பிழைப்பும், வாழ்வும், புகழும், ஓட்டும் கிடைத்தால் போதுமென்று, உப்புக்கண்டம் (மாமிசம்) திருட்டுக்கொடுத்த பார்ப்பனர்போல் வாயை மூடிக்கொண்டு ஒரு பக்கம் தலையும், மற்றொரு பக்கம் வாலும் காட்டிக் கொண்டு வாளாய் கிடைக்கின்றார்கள். சமீபகாலமாக ஒரு இரண்டு மூன்று வாரகாலமாய் அதாவது காந்தி நாடகத்தில், குருவாயூர் கோவில் பிரவேச காந்தி பட்டினி பாகம் நடிக்கத் தொடங்கியவுடன் "சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான்......" என்பதுபோலாகிசங்கராச்சாரியும் மற்றும் உள்ள பார்ப்பனர்களும் எழுதும் விஷயங்கள் பத்திபத்தியாய், கலம் கலமாய், பக்கம்பக்கமாய் பத்திரிக்கைகளில் கொள்ளை போகின்றன. அவற்றில், இதற்கு முன் சூத்திரன் என்று சொல்வதற்கு. பார்ப்பனர்களில் பெரிய பெரிய ஆள்களெல்லாம் பயந்து நடுங்கிக்கிடந்ததுபோய் இப்போது அகூரியபாத்திர பார்ப்பனர்கள் முதல் யாவரும் சூத்திரன், சூத்திரன் என்று வரிக்கொரு வார்த்தையும், சண்டாளன், சண்டாளன் என்று பத்திக்கு பல வார்த்தையுமாக அவசர அவசரமாய் அள்ளிக் கொட்டுகிறார்கள். ஏன் என்று கேட்க நாதியில்லை.

இதுதான் இன்றைய தேசிய வேலையாய் போய்விட்டது. கோவிலுக்குப்போயவன் 'மோட்ச'மடைந்தாலென்ன? அடையாவிட்டாலென்ன? எந்தக்கோவில் இடிந்து நாசமாய்ப்போனால் நமக்கென்ன? இந்த சாக்கை வைத்துக் கொண்டு இந்த யோக்கியர்கள் ஏன் சூத்திரன், சண்டாளன், என்பவைகளை நிர்ணயம் செய்ய பாடுபட வேண்டும்? என்பதுதான் நமது கேள்வி.

ஒரு பார்ப்பான் 'தீண்டப்படாதவர்கள், ஆதிதிராவிடர், ஹரிஜனங்கள் என்பவர்கள் எல்லோரும் சண்டாளர்கள் ஆனதினால் கோவிலுக்குள் போகக்கூடாது' என்று எழுதுகிறான், மற்றொரு பார்ப்பான் "அது சரியல்ல சண்டாளர் என்பது பஞ்சமர்கள் அல்ல. மற்ற யார் என்றால், மேல்ஜாதி பெண்ணுக்கும், கீழ் ஜாதி ஆணுக்கும் பிறந்தவர்கள் தான் சண்டாளர்கள்' என்று எழுதுவதும், அப்படிப் பிறந்தவர்கள் யார்யார் என்று பார்க்கப்போனால் செட்டி, நாயுடு, நாடார், முதலி, கவுண்டர், கோனார், குயவர், நாவிதர் என்று ஒரு "ஸ்மிருதி" சொல்லுவதும், மற்றொரு ஸ்மிருதியில் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் எல்லாம் என்று சொல்லுவதும், அதாவது "கலியுகத்தில் பிராமணர்கள் தவிர மற்ற க்ஷத்திரியர், வைசியர், கிடையாது. சூத்திரர்தான் உண்டு அவர்களுக்குள் இருக்கும் ஜாதிகளுக்கு ஆதாரம் கலப்புப்பிறவி, விபசாரப்பிறவி" என்று காணப்படுவதும், இந்த ஆதாரங்களைத் தைரியமாய் வெளிப்படுத்தி ஜனங்களுக்குள் செல்வாக்கு ஏற்படுத்தி நிலைக்கச்செய்வதும் ஆனகாரியங்களே இன்று கோவில் பிரவேசமாகவும், எதிர்ப்பாகவும் இருந்துவருகின்றது.

இதை ஆட்சேபிக்காமல் சகித்துக்கொண்டு இருக்கும் மக்கள் தான் இன்று முதல்நெம்பர் தேசியப்பத்திராதிபர்களாகவும், தேசபக்தர்களாகவும் விளங்குகிறார்கள். ஓட்டுக்காகவும், வயிற்றுப்பிழைப்புக்காகவும், பத்திரிக்கை வியாபாரத்திற்காகவும், தீண்டாமை விலக்கு, கோவில் பிரவேசம் ஆகிய நடிப்பில் பாத்திரர்களாய் (வேஷதாரிகளாய்) அமர்ந்தவர்களுக்குமானம், வெட்கம், சொரணை இருப்பதற்கு ஞாயமில்லை. ஏனெனில் பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பதும், கருமமே கண்ணாயினர் என்பதும் இவர்களை மாத்திரம் விட்டு விடாது. ஆனால் உண்மையில் சமத்துவத்தை விரும்புகிறேன், சமதர்மம் எனது கொள்கை என்கின்ற வீரர்கள் இதை ஏன் சகிக்கிறார்கள் என்கின்ற ரகசியம் மாத்திரம் நமக்கு விளங்கவில்லை.

### இரண்டு ஆச்சாரியார்கள்

யாரோ இரண்டு பேர் சண்டை போட்டுக்கொள்ளுவதில் அதில் சம்பந்தமில்லாதவர்களை எதற்காகச் சூத்திரன் என்றும், சண்டாளன் என்றும், பல ஜாதிக் கலப்பு என்றும் சொல்வது என்பது தான் நமது கேள்வி. அதில் ஒரு கட்சியார் அபிப்பிராயப்படி அதாவது வைதிக சங்கராச்சாரி அபிப்பிராயப்படி பார்த்தால்தீண்டப்படாதவர்கள் சண்டாளராகிறார்கள். சீர்திருத்த அச்சாரியார் அபிப்பிராயப்படி பார்த்தால் பார்ப்பனரல்லாத மற்ற ஜாதியார் சண்டாளராகிறார்கள். இதற்குள் தீண்டாதவர்களும் மற்றவர்களும் சேர்ந்து விடுகிறார்கள்.

இதை யோசித்தோமானால் சங்கராச்சாரி கூட்டம் ஆழாக்கை தலை கிழாகக் குப்புறக்கவிழ்த்தி அளப்பதாய் சொன்னால், சீர்திருத்த ஆச்சாரியார் ஆழாக்கைப் படுக்கை வசத்தில் வைத்து அளந்து போடச்சொல்லுகிறார். இவர்

களில் யார் யோக்கியர் என்பதே விளங்கவில்லை.

நம்மைப்பொருத்தவரை படுக்கவைத்து அளக்கும் சீர்திருத்த ஆச்சாரியைவிட குப்புறக் கவிழ்த்து அளக்கும் சங்கராச்சாரியாரையே [கூறை வீட்டில் எரிக்கொள்ளிக்கட்டை வைத்து விளையாடுபவரே இருவரில் யோக்கியர் என்பதுபோல்] யோக்கியர் என்று சொல்லுவோம்.

## சங்கராச்சாரி.

இது நிற்க, சங்கராச்சாரியின் அட்டகாசமும், ஆணவமும், கொள்ளையும் இன்று சென்னையில் தாண்டவமாடுகின்றது. என் என்று கேட்பாரில்லை. பார்ப்பனரல்லாத மக்கள் அவர் காலில் 1000, 2000, 3000, 5000, 10000 ரூ. கணக்காய் கொண்டு போய்க் கொட்டி பெண்டு பிள்ளைகளுடன் விழுந்து கும்பிட்டு பாத தீர்த்தம் வாங்கி சாப்பிட்டு விட்டு வருகிறார்கள். சங்கராச்சாரி கால் கழுவின தண்ணீர் இன்று தங்கத்தைவிட வண்—வைரத்தைவிட அதிக விலைக்கு விற்கப்படுகின்றது. சுயராஜ்யம் கேட்கும் ஆட்களும் காந்தி சுயராஜ்யத்திற்கு அதாவது ராமராஜ்யத்திற்கு 1000, 10000 என்று காந்தி சிஷ்யர்கள் வயிற்றுப்பிழைப்புக்கு அள்ளியள்ளிக் கொடுத்த ஆட்களும் இதில் அதிகம் இருக்கின்றார்கள். இவர்களுக்கு ஏதாவது கடுகளவு அறிவாவது சுயமரியாதையாவது இருக்கின்றதா என்பதுதான் நமது சந்தேகம்.

சங்கராச்சாரி என்றால் என்ன? யாருக்கு சங்கராச்சாரி? அவரது கொள்கை என்ன? நடப்பு என்ன? வேஷம் என்ன? எண்ணம் என்ன? அனுபவம் என்ன? என்பது போன்ற ஒவ்வொன்றையும் யாராவது கவனித்தார்களா? அல்லது கவனித்தும் வேண்டுமென்றே தெரியாதவர்கள்போல் நடந்துகொள்ளுகிறார்களா? என்பது நமக்கு விளங்கவில்லை.

தோழர்களே! சற்று கவனித்துப்பாருங்கள். சங்கராச்சாரியார் என்பவர் ஒருவிதமான "ஆணவம் பிடித்த நாஸ்திகக்கொள்கைகாரர்" அதாவது கடவுள் என்று ஒரு தனிப்பொருள் கிடையாது என்பதோடு தானேதான் கடவுள் என்ற கொள்கையுடையவர்.

ஆனால் அவர் தினமும் பூஜிக்கும் உருவமோ ஒரு தனிக்கடவுள் உருவம், அதிலும் பெண் கடவுள் அதாவது "சக்திபூஜை" வேஷமோ, சைவவேஷம், விபூதி பட்டைபட்டையாய் பூசிக்கொள்வது.

நிலைமோ சந்யாசி நிலை அதாவது தலை மொட்டை காவிவஸ்திரம்.

அனுபவமோ, ராஜபோகம் யானை—குதிரை—பல்லக்குபடை எடுபிடி ஆள்கள்.

இந்த நிலையில் உள்ள இவரால் பெரும் மக்களுக்கு ஏற்படும் பயனோ தெண்டவரி, அதாவது சர்க்கார் தண்டவரியைவிட மோசமானவரி. பார்ப்பன உத்தியோகஸ்தர்களையும் செல்வாக்கான பார்ப்பன வக்கீல்களையும், பார்ப்பன பத்திராதிபர்களையும் விட்டு மிரட்டியும் தாட்சண்யத்திற்கு கட்டுப்படுத்தப் படக்கூடிய தந்திரத்தைச்செய்தும் மக்களின் விதரை நசுக்கு வதுபோல் நிர்ப்பந்தப்படுத்தி பணம் வசூல் செய்வது.

இப்படி வசூல் செய்யப்பட்ட பணத்தைக்கொண்டு செய்யப்படும் காரியமோ பார்ப்பன சோமபேரிகளுக்கும், கொட்டாப்புடிகளுக்கும் பானைபானையாய் பாயாசம் வடையுடன் பொங்கிப்போடுவது.

பணம் கொடுத்தவர்களுக்கு பயனோ கொடுப்பதையும் கொடுத்து சங்கராச்சாரிகாலிலும் பெண்டுபிள்ளைகளுடன் விழுந்துபோராக்குறைக்கு அவர் கால் கழுவின தண்ணீரையும் குடித்துவிட்டுவந்து வீடு சேருவது.

இவ்வளவோடு இந்த சீன் முடிவு பெறுவதில்லை. பணம் கொடுத்த பார்ப்பனரல்லாதார் வீடுவந்து சேருவதற்குமுன்பதாகவே பணம் கொடுத்த பார்ப்பனரல்லாதார்களை பார்த்ததற்காகவும், அவர்களுடன் பேசினதற்காகவும் அந்ததோஷபரிகாரத்துக்காக இவர்கள் பணத்திலேயே பார்ப்பனர்க்கு தானம் வழங்குவதும், அவரும் குளித்துமுழுகி தீட்டைக்கழித்துவிட்டு ஜபம் செய்து தோஷத்தை பரிகாரம் செய்துகொள்ளுவதும் ஆகும்.

இவை ஒருபுறமிருக்க இவருக்கு தனி யோக்கியதை என்ன என்பதைப்பார்ப்போம். இவர் ஒரு சாதாரண பார்ப்பனர். இவருக்குமுன் அந்தப்பட்டத்தில் இருந்தவர் இவரைப் பிடித்துவைத்துவிட்டுப்போனார் என்பதைத் தவிர வேறு ஒரு யோக்கியதையோ அருகதையோ கிடையாது. இவருக்குப் பிறகு யார் அந்தப் பட்டத்துக்கு வருவார் என்பதும் இவர் பிடித்துவைக்கும் ஆளே யொழிய வேறில்லை. இவர்காலம் முடியும்வரை எந்த வழியிலாவது இவருக்கு திருப்தியாய் நடந்து கொள்ளுகின்றவர்கள் அந்த ஸ்தானத்திற்கு அருகதையாகிவிடுவார்கள். ஆகவே வாக்கு சுதந்திரம், ஓட்டு சுதந்திரம், ஜனநாயகம் கேட்கிறோம் என்றுசொல்லும்பார்ப்பனர்கள் அதைவிட மேலானதாகக்கருதும் தங்கள் மத விஷயத்தில் "ஆத்மார்த்த பாரமார்த்திக" விஷயத்தில் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதையும் இந்தப்படி நடந்து கொள்ளுவது அறிவில்லாமலா அல்லது மோசவித்தனத்தாலா அல்லது இதுவும் சுயராஜ்யம், தேசியம் என்பதைப்போன்ற ஒரு சூட்சியாலா என்று யோசித்துப்பாருங்கள்.

நிற்க, "சகலத்தையும் துறந்து "ஆன்ம கோடிகள் உய்வதற்காக உலகில் தோன்றிய அவதார புருஷரான" "சங்கராச்சாரிய சுவாமிகள்" யானை, குதிரை, பல்லக்கு இதைத் தூக்க 32 ஆள்கள்; மற்றும் படை கொடி எதற்குஎன்று கேட்பது ஒருபுறமிருக்க இவருக்கு அதாவது இந்த சந்யாசிக்கு "பிச்சைக்கு" என்று தினம் 1க்கு 500 ரூ. அழுவது எதற்காக என்று கேட்கின்றோம். இவர் பக்தாள் வீடுகளுக்குச் செல்லத் தனித்தனி ரேட்டுகள் எதற்காக என்று கேட்கின்றோம்.

இந்தப்படி வசூலித்த பணத்தைக்கொண்டு பொங்கிப்பொங்கிப் போடும் சமாராதனையில் பணம் கொடுத்த பார்ப்பனரல்லாதார் ஏன் கலந்து கொள்ளக் கூடாது என்று கேட்கின்றோம்.

ஒரு சமூகத்தில் எவ்வளவுதான் அடி முட்டாள்கள் இருந்து விட்டாலும் அதை இன்ன அளவுதான் ஏமாற்றுவது என்கின்ற ஒரு பக்ஷாத்தாபமாவது இருக்கவேண்டாமா? என்று கேட்கின்றோம்.

இவைகளையெல்லாம் நன்றாய் யோசித்துப்பார்த்தோமேயானால் இது ஒரு பார்ப்பனப் பிரசாரம் என்றும், பார்ப்பன ஆதிக்கத்திற்காக செய்யப்படும் பார்ப்பன மத சூட்சிப்பிரசாரம் என்றும் சொல்லாமல் வேறு என்ன சொல்ல இருக்கின்றது.

காந்தியைப மகாத்மா ஆக்கினதில் எத்தனை சோம்பேரிகளுக்கு வயிற்றுப்பிழைப்புக்கும், உத்தியோகம், பதவி புகழ்வேட்டைக்கும் இடம் கிடைத்ததோ அதைவிட எத்தனையோமடங்கு அதிகமான பேருக்கு ஒரு பார்ப்பனரை சங்கராச்சாரி, லோககுரு ஆக்கினதில் வயிற்றுப்பிழைப்பு மாத்திரமில்லாமல் உயர்ந்த ஜாதி நிலையும் ஏற்பட்டுவருகின்றது.

சங்கராச்சாரி இன்னார் என்றும், அவருடைய யோக்கியதை இன்னதென்றும் நம்மைவிட பலமடங்கு அதிகமாகவே பார்ப்பனருக்கும் தெரியுமானாலும் அதை ஒரு சாதனமாய் வைத்து அநாவது கோவிலில் ஒரு கல்லை நட்டு அதன் மூலமாக மக்களைக் கொள்ளை அடிப்பதுபோல் மதவியாபாரம் நடத்துகிறார்கள். இந்த மாய்கையில் பார்ப்பனரல்லாத மக்கள் சிக்கி பணத்தை அள்ளிக் கொடுப்பதென்றால் அறிவுள்ள யாருக்குத்தான் வயிறு கொதிக்காது என்று கேட்கின்றோம்.

இந்த லட்சணத்தில் அவர் குருவாயூர் கோவில் பிரவேசத்தைப்பற்றி ஜாமொரினுக்கு "சண்டாளர்களைக் கோவிலுக்குள்விடாதே" என்று தந்திகொடுத்திருக்கிறாராம். இது எவ்வளவு அயோக்கியத்தனமான காரியம் என்று கேட்கின்றோம். இவருக்கும் (அதாவது சங்கராச்சாரிக்கும்) குருவாயூருக்கும் எந்த விதத்தில் சம்மந்தம் என்று கேட்கின்றோம்.

அப்படியானால் காதருக்கும், ஆசாரவாசைக்கும் உள்ள சம்மந்தம்போல் இவரோ தானே கடவுள் என்பவர், சைவவேஷக்காரர், சக்திபூசைக்காரர், சன்னியாசி துறவி ஆகிய இத்தனைக்கும் சம்மந்தம் இல்லாதது ஒரு கல்லுருவம் உள்ள இடம் அதுவும் விஷ்ணு சாமி என்கின்ற பெயர்கொண்ட கல் உருவம் உள்ள கோவில் அதுவும் "பாமர மக்களை உஜ்ஜீவிக்கச்செய்ய அச்சாவதாரமாய் எழுந்தருளி இருக்கும்" இடம், அதுவும் ஒரு மனித உருவ ஸ்திரீயின் வயிற்றில் பிறந்து வளர்ந்து பிறகு கடவுளாகிவந்த ஐதிகத்தை ஆதாரமாய் வைத்து செய்யப்பட்ட உருவத்தினிடம் ஒருகூட்டத்தாரைமாத்திரம் போகவிடப்படக்கூடாதென்றும் அவர்கள் சண்டாளர்களென்றும், தந்திகொடுப்பதென்றால் அதுவும் எப்படிப்பட்ட சமயத்தில் இரண்டு உயிர்கள் அதாவது ஒரு "மகாத்மா" என்னும் உயிரும், மற்றொன்று 'மகாத்மாவினது' பிரீதிக்கு பாத்திரமான உயிரும் ஆக "இரண்டு உயிரும் செத்தாலும்சரி அதைப்பற்றி யாரும் கவலைப்படவேண்டியதில்லை, கல்லுருவத்தினிடம்மாத்திரம் மனிதனைவிட்டுவிடாதே" என்கின்ற கருத்தின்மீது தந்திகொடுப்பதென்றால் இதன் ஆணவத்தையும், அகம்பாவத்தையும் என்னவென்று சொல்வது? ஒரு சமயம் இவருக்கு ஜீவன்களிடத்தில் அன்பும், சமத்துவமும் ஞானமும் இருந்திருக்கு

மானல் "யார் செத்தாலும் கவலையில்லை மக்களில் ஒரு சமூகத்திற்கும் ஒருவித இழிவும் இருக்கக்கூடாது. எல்லோரையும் உள்ளே விட்டு அவர்களுக்கு உள்ள இழிவை நீக்குங்கள்" என்று தந்தி கொடுத்திருந்தால் இவரை மனித சமூகத்தில் சேர்க்கலாம். அப்படிக்கில்லாமல் இந்தப்படி தந்தி கொடுப்பதை நினைத்தால் இந்த ஸ்தாபனத்தின் அட்டூழியம் எவ்வளவு என்பதுதான் முன்வந்து நிற்கின்றது.

தோழர்கள் காந்தியும், கேளப்பனும் செத்துப்போவார்களே என்று நாம் சிறிதும் கவலைகொண்டு இவ்விதம் எழுதவில்லை. அவர்கள் இருவரும் எப்படியாவது, என்றைக்காவது சாகின்றவர்கள்தான் என்பது நமக்கு நன்றாய் தெரியும். அவர்கள் தங்களுடைய உயிரை வியாதிக்கும், மூப்புக்கும் பலியாய் கொடுப்பதைவிட ஒரு சமூகக்கோ அல்லது தாங்கள் நல்லதென்று நினைக்கிற ஒரு காரியத்திற்கோ பலி கொடுப்போமே என்று எண்ணி இருக்கலாம். அல்லதுபல காரணங்களால் வாழ்க்கையில் வெறுப்புத்தோன்றி இருக்கலாம். ஆதலால் நமக்கு அதைப்பற்றி கவலை இல்லை. சங்கராச்சாரியாரின் இப்படிப்பட்ட காரியமும், அவர் ஆதரவால் நடத்தப்படும் பார்ப்பன ஆதிக்கப்பிரசாரமும் சகிக்கக்கூடியதாயில்லை என்பதற்காகவே இதை எழுதுகின்றோம். சங்கராச்சாரி சென்னையில் இன்னும் ஒரு மாத காலம் தங்கப் போவதாகவும் அதற்கு பல பேர் பார்ப்பனரல்லாதார்களே இன்னும் பல ஆயிரரூபாய்கள் கொடுக்கப்போவதாகவும் யாரோ ஒரு மார்வாடி சேட் ஒரு மாதத்திய செலவையும் அதாவது சுமார் 10, 20 ஆயிரம்ரூபாயையும் பொருத்துக்கொள்ளப் போவதாகவும் கேள்விப்பட்டோம். இது உண்மையாய் இருக்குமானல் இதை மனதார அனுமதிக்கலாமா என்பதேதான் இப்போதைய நமது கேள்வி. நாட்டில் உள்ள பண நெருக்கடி எவ்வளவு? ஏழைகள் தொழிலாளர்கள்வேலையில்லாமல், கூலி இல்லாமல் பிள்ளைகுட்டிகளுடன் பட்டினி கிடந்து தொல்லைப்படுவது எவ்வளவு? உதாரணமாக எம் எஸ். எம். ரயில்வே தொழிலாளர்கள் வேலையில்லாத காரணத்தால் சிலரால் வேலை நிறுத்தம் செய்யப்பட்டு அவரவர்கள் வீட்டு அடுப்பில் பூனைக்குட்டிகள் தூங்கிக்கொண்டிருக்கின்றன. அவர்களது பிள்ளைகுட்டிகள் பட்டினியால் மடிகின்றன.

ஏன் என்று சேட்க நாதியில்லை ஆனல் சோம்பேறிப்பார்ப்பனர்களுக்கு நின்று கொழுக்க என்று சமாராதனைக்கு பதினாயிரக்கணக்கான ரூபாய் கொள்ளை போகின்றதுடன் வேகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம் என்பதுபோல் வேலை நிறுத்தத்தை ஆதாரமாய் வைத்துக்கொண்டு தாங்கள் பெரிய மனிதர்களாகவும் நோகாமல் சட்டசபைக்குப் போகவும் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதைத்தவிர வேறு என்ன நடக்கின்றது என்று கேட்கிறோம்.

தேசியப் பத்திரிகைகள் தொழிலாளர்களிடத்தில் சுயமரியாதைக்கொள்கைகளைப்பற்றி விஷமப்பிரசாரம் செய்துவிட்டு தங்கள் பத்திரிகையில் சங்கராச்சாரி பிரசாரத்திற்கு தினம் 5 கலமும், சீர்திருத்த ஆச்சாரிக்கு தினம் 10 கலமும் இடம் ஒதுக்குவதைத்தவிர மற்றும்இதில்ப்ரவேசித்தால் தங்களுக்கு ஏதாவது தலைமை ஸ்தானம் கிடைக்குமா என்று மீன் கொத்தி குருவிபோல் பார்ப்பதைத்தவிர வேறு என்ன செய்கின்றன என்று கேட்கின்றோம்.

ஆகவே நாம் முடிவாகச்சொல்லுவதென்னவென்றால் கள், சாராயக்கடை மறியலைவிட, அன்னியத்துணி மறியலைவிட. மற்றும் கோவில் பிரவேசத்திற்கு உயிர் விடுவதைவிட, சங்கராச்சாரி கொள்ளையையும், அட்டூழியத்தையும், அவர் பார்ப்பனரல்லாத மக்களை இழிவு படுத்திப் பிரசாரம் செய்வதையும் அடக்குவதற்குப்பாடுபடுவதே முக்கிய கடமை என்று சொல்லுகின்றோம். ஏனெனில் இது நமது சமூகத்திற்கே அவமானம்! அவமானம்!! அளவு கடந்த அவமானம்!!!

## உலகயாத்திரை.

### ஜி. டி. நாயுடு வருகை

கோவை யு. எம். எஸ். மோட்டார் சர்விஸ் சொந்தக்காரரான தோழர். ஜி. துரைசாமி நாயுடு அவர்கள் தமது 9 மாத மேல்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தை அதாவது ஜர்மன், இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான், சைனு, முதலிய தேசங்களில் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு, டிசம்பர் மீ 13 ௳ கோயமுத்தூர் வந்து சுகமே சேர்ந்தார். கோவையில் அவருக்கு ஒரு பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. பல ஆயிரக்கணக்கான மக்கள் வெகு ஆடம்பரமாக வரவேற்றார்கள்.

## கண்ணம்மாள்

### தீர்மானம் நிறைவேறியது.

சென்ற வாரப்பத்திரிகையிலறிவித்திருந்தபடிமுனிசிபல்கௌன்சிலர் தோழர். எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்களால் கொண்டுவரப்பட்ட ஈரோடு மூனிசிபல் அதிகாரத்திற்குள்பட்ட ஸ்தாபனங்களில் பெண்களுக்கும் உத்தியோகம் வழங்க வேண்டுமென்ற தீர்மானம் 17—12—32-ந் தேதி கூடிய முனிசிபல் கூட்டத்தில் தோழர். சிக்கையா அவர்களால் ஆமோதிக்கப்பட்டு சில திருத்தங்களுடன் ஏகமனதாய் நிறைவேறியது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

[9-ம் பக்கத்தொடர்ச்சி.]

இந்திய விஷயத்தில் தோழர் காந்தியையும், இர்வின்பிரபுவையும் கொடுமையான வட்டமேஜை மகாநாட்டையும் ஆதரிக்கிறார். அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இந்தியாவானது இந்திய அரசர்களும், ஜமீன்தாரர்களும், முதலாளிமார்களும், ஐரோப்பிய வியாபாரிகளுமே ஆதிக்கம் வகிக்கும்படியானதும் தொழிலாளிகளுக்கும், குடித்தனக்காரர்களுக்கும் பாத்தியமும்- பொருப்பும், இல்லாததுமான ஒரு அரசியல் சபைமூலம் இந்திய நிர்வாகம் நடக்கும்படியான காரியத்திற்கு உதவி செய்கிறார். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

6. தோழர் லான்ஸ்பரி அவர்கள் யுத்தத்தையும், யுத்த முஸ்தீபையும் வெறுக்கிறதாக சொல்லுகிறார்கள். ஆனல் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகளையும், பிரிட்டிஷ் வைஸ்ராயையும் திருப்பி அழைத்துக்கொள்ள மறுக்கிறார்.

7. கடைசியாக இருந்த தொழிற்கட்சி அரசாங்கமானது இரண்டு வருஷகாலத்தில் அனுப்பிய ஆகாய சண்டைக் கப்பல்களையும், வெடிகுண்டுகளையும், மோட்டார் பீரங்கி வண்டிகளையும் கவசம் செய்தமோட்டார் வண்டிகளையும், யந்திரத் துப்பாக்கிகளையும், பிரிட்டிஷ் பட்டாளங்களையும் கணக்கு பார்த்தால் பால்ட்வின் அரசாங்கமானது தனது 5-வருஷம் ஆட்சியில் அனுப்பப்பட்டதைவிட அதிகமாகவே இருக்கிறது. தோழர்களே! இவற்றிலிருந்து பிரிட்டிஷ் தொழிலாளர் பார்ட்டி என்று சொல்லப்படும் சமதர்ம பார்ட்டியின் யோக்கியதையை அறிந்து கொள்வது என்பது எங்களுக்கு மிகக்கஷ்டமாகவே இருக்கிறது.

ஆதலால் யார்க்ஷைர் தொழிலாளிகளே நீங்கள் இந்த போலி கட்சிகளையும்,கொள்கைகளையும்நம்பாமல் மனித சமூக விடுதலைக்கும், சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் உண்மையாகவே போராட உலக தொழிலாளர்களின் ஒற்றுமையை எதிர்நோக்கிக்கொண்டிருங்கள்.

## ஏஜண்டுகள் தேவை!

மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரைகளும், சமூக சமுதாய அரசியல் செய்திகளுடனும், அச்சமற்ற ஆணித்தரமான அபிப்பிராயங்களையும் கொண்டு ராயல் 1க்கு 4 சைசில் 12 பக்கம், ரேப்பருடன் பிரதி ஞாயிறு தோறும் மதுரையிலிருந்து வெளியிடும் "வெடிகுண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிகைக்கு எல்லா விடங்களிலும் விற்பதற்கு ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி அரையணு. வருடச்சந்தா ரூ.3. ஏஜண்டுகளுக்கு பிரதி 1 க்கு 2 பைசா கமிஷன் கொடுக்கப்படும். எத்தனை பிரதிகள் தேவையோ அத்தனைப் பிரதிகளின் நான்கு வாரத்திய தொகையை முன்பணமாக அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
"வெடிகுண்டு" கார்யாலயம்,
தெற்கு வாசல், மதுரை.

## விளம்பரம்.

ஈரோடு முனிசிபாலிட்டி லார்டு நேபியர் வீதியில் இக்கவுன்சிலுக்குப் பாத்தியப்பட்ட 1 நெம்பர் கடையை 6—2—33 முதல் 10—6—35 முடிய உள்ள காலத்தற்கு வாடகைக்கு விட 2—2—1933ந்தேதி காலை 9 மணிக்கு ஈரோடு முனிசிபலாபீசில் ஏலம் நடை பெறும்.

கே. ஏ. ஷேக் தாவுத்,
சேர்மன்.

## ஒரு பெண் தேவை.

ஒரு கவர்மெண்டு ஆஸ்பத்திரியில் சப். அஸிஸ் டெண்டு சர்ஜனுக எல்-எம்-பி இருந்துவரும் ஒரு இந்து பார்ப்பனரல்லாதார் மறுமணம் செய்துகொள்ள விரும்புகிறார். இந்து பார்ப்பனரல்லாதாருக்குள் எவ்வகுப்பிலாயினும் ஆங்கிலத்தில் எஸ் எஸ் எல் சி வரையாவது வாசித்துள்ள மணமகள் வேண்டும். மணமகனுக்கு சுமார் 30வயது மற்றும் விபரங்கள் எழுதி தெரிந்து கொள்ளலாம். இவ விருப்பத்திற் கிணங்க மணமகள் இருப்பதாக உணர்ந்த தோழர்கள் உடனே எமக்கெழுதி யுதவ வேண்டுகிறேன் என ச.ம.சி. பரமசிவம்எழுதுகிறார்

## மணமகன் தேவை.

நல்ல அழகும் சிறிது செல்வமும் கல்வியும் உடைய வாலிபமடைந்த பெண்ணுக்கு ஒரு மணமகன் தேவை கல்வியில் பட்டம் பெற்றவரும் உத்தியோகத்தில் இருப்பவரும் அல்லது தக்க தொழில் முறையில் இருப்பவருமான சுமார் 20, 25 வயதுடைய வாலிபராய் இருக்கவேண்டும்.

K. S.
C/o குடி அரசு

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

படியான நிலைமையாகி, அசலுக்கு என்று குடிகளிடம் பணம் வசூலிக்க வேறு புதிய மார்க்கங்களையும் கண்டு பிடித்துத் தீரவேண்டிய அவ்வளவு பெரிய பாரமாக முடிந்திருக்கிறது.

## கடன் பெருகிவந்த விதம்.

1739-ம் வருஷத்தில் ஸ்பெயினுக்கும் பிரிட்டனுக்கும் ஒரு யுத்தம் தொடங்கி அது நீடித்து நடந்தது. பிறகு பிரஞ்சும் அதில் கலந்து கொண்டது; இந்த யுத்தத்திற்கும் அதை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் சமாதான உடன்படிக்கைக்குமாக மொத்தத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு 1748-ம் வருஷத்தில் 79000000 ஏழு கோடியே தொண்ணூறு லக்ஷம் பவுன் (அதாவது சுமார் நூத்தி ஐந்து கோடி ரூபாய்) கடனாக ஏற்பட்டு அதற்கு வருஷம் ஒன்றுக்கு 3000000 முப்பதுலக்ஷம் பவுன் (அதாவது நாலுகோடி ரூபாய் வட்டி கட்டிக்கொண்டு வர வேண்டியதாகிறது.

அதற்குப் பிறகு நடந்த "ஏழு வருஷ யுத்தம்"என்பதற்கும், அதன் பிறகு அமெரிக்காவுடன் தொடர்ந்த யுத்தத்திற்கு ஏற்பட்ட செலவுகளின் பயனாய் கடன் பெருகி 1783-ம் வருஷத்தில் பிரிட்டனின் கடன் 250000000 இருபத்தைந்து கோடி பவுன் (அதாவது முன்னூத்தெண்பது கோடி ரூபாய்) ஆக ஏறிவிட்டது.

1783-ம் வருஷம் முதல் 10 வருஷகாலத்தில் மேல்கண்ட மொத்த கடன் தொகையிலிருந்து 6000000. அறுபதுலக்ஷம் பவுன் (அதாவது எட்டுகோடி ரூபாய்) மாத்திரமே கடனுக்கு கட்டி அசலிலிருந்து குறைக்க முடிந்தது.

ஆதலால் 1793-ம் வருஷத்தில் பாக்கியிருந்த கடன் 244000000 இருபத்து நாலுகோடியே நாற்பது லக்ஷம் பவுனாகும். (அதாவது, சற்று ஏறக்குறைய முன்னூறு கோடி ரூபாய்களாகும்) ஆகவே 1793-ம் வருஷம் பிரான்சுடன் தொடுக்கப்பட்ட யுத்தத்தின் போது பாக்கியிருந்த இருபத்து நாலுகோடி பவுனானது, 1815ம் வருஷம் நடந்த வாட்டர்லோ யுத்தத்தின் செலவையும் சேர்த்து கிட்டத்தட்ட 900000000 தொண்ணூறுகோடி பவுனாக ஏறிவிட்டது. (ஆயிரத்து இருநூறுகோடி ரூபாயாகிவிட்டது) இந்தப்படி ஏற்பட்டுவிட்ட பெருங்கடனுக்கு கடன் கொடுத்த முதலாளிகளுக்குக் கொடுத்துவரவேண்டிய வட்டி பளுவானது தொழில் செய்து பிழைக்கும் மக்கள் மீது அளவுக்கு மீறிய வரியைப் போட்டு அவர்களை நெருக்கிப் பிழிந்து அவர்கள் பட்டினியால் வருந்தும்படி செய்யவேண்டியதாய் விட்டது. இந்த நிலைமையானது சென்ற நூற்றாண்டின் கைத்தொழில் சரித்திரத்தில் முக்கியமாக இடம்பெறவேண்டியதாகிவிட்டது.

1815-க்கும் 1850-க்கும் இடையில் உள்ள 35 வருஷகாலத்தில் இந்தப் பெரிய கடன் தொகையில் 80000000 எட்டுக் கோடி பவுன் (நூற்று ஆறுகோடி ரூபாய்) மாத்திரமே கடன் தொகை அசலிலிருந்து குறைக்க முடிந்தது என்றாலும், 1857-ம் வருஷத்தில் நடந்த கிரிமியா யுத்தமானது மறுபடியும் 40000000 நாலு கோடி பவுன் (53 கோடி ரூபாய்) அதிகக்கடன் ஏற்பட்டு, 840000000 எண்பத்து நாலு கோடி பவுன் (ஆயிரத்து முன்னூறு கோடி ரூபாய்) கடன்கொடுக்க வேண்டியதாகிவிட்டதுடன், மேற்படி கடனுக்கு வருஷம் ஒன்றுக்கு 29000000 இரண்டு கோடியே தொண்ணூறு லக்ஷம் பவுன் (முப்பத்து எட்டு கோடி ரூபாய்) வீதம் வருஷா வருஷம் வட்டி கட்டிக் கொண்டு வரவேண்டியதாகவும் ஏற்பட்டுவிட்டது.

இதன் பிறகு போயர் யுத்தம் ஏற்படும் காலம் வரையிலுள்ள மத்திய காலத்தில் மேல்கண்ட அசல் தொகையில் 200000000 இருபது கோடி பவுன் (இரநூற்று அருபத்தைந்து கோடி ரூபாய்) மாத்திரமே கடனின் அசலிலிருந்து குறைக்க முடிந்திருக்கிறது. என்றாலும் போயர் யுத்தத்தின் பயனாய் ஏற்பட்ட மற்றொரு யுத்தச் செலவாகிய 160000000 பதினாருகோடி பவுன் (இரநூற்றுப் பனிரண்டு கோடி ரூபாய்) அசலுடன் கூடி, யுத்த முடிவில் மொத்தக்கடன் 800000000 எண்பது கோடி பவுன் (ஆயிரத்து அறுபது கோடி ரூபாய்) ஆகிவிட்டது. அதன் பிறகு பத்து வருஷ காலத்தில் 90000000 ஒன்பது கோடி பவுன் மாத்திரமே அசலுக்காக கொடுக்கப் பட்டு, அசல் கடனை 700000000 எழுபது கோடி பவுனாக ஆக்கிக்கொள்ளப் பட்டது. ஆனால் 1914ம் வருஷத்தில் மறுபடியும் ஒரு மகாயுத்தம் தொடங்கப்பட்டு விட்டது.

மகாயுத்தம் தொடங்கிய காலத்தில் இருந்த மொத்தக்கடன் 700000000 எழுபது கோடி பவுனே (சற்றேரக்குறைய சுமார் ஆயிரம் கோடி ரூபாய்)ஆனாலும், 1868ம் வருஷம் முதல் 1914ம் வருஷம் வரை, மேல் கண்ட தேசியக் கடனுக்கு அசல்களுக்காக அவ்வப்போது கொடுத்துக்கொண்டு வந்த தொகைகள் போக வட்டிக்கு மாத்திரம் 2760000000 இருநூற்று எழுபத்தி ஆறு கோடி பவுன் (மூவாயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி ரூபாய்) கொடுத்து வந்திருக்கிறது.

## மகாயுத்தம்.

மகாயுத்த காலத்தில் ஏற்பட்ட தேசியக்கடனைப்பற்றிய விருத்தாந்தத்தில் ஒவ்வொரு வருஷமும் ஏற்பட்ட கடன் மொத்தத்தைப்பற்றிய குறிப்புகள் இங்கு அவ்வளவு அவசியமானதல்ல என்றே கருதி விட்டு விட்டோம்.

1914ம் வருஷத்தில் மகாயுத்தம் தொடங்கும்போது இருந்த மேல் குறிப்பிட்ட தொகையாகிய 700000000 எழுபது கோடி பவுன் கடனானது, 1919ம் வருஷம்மார்ச்சு மாதம் முடிவில் 7480000000 எழுநூற்று நாற்பத்தெட்டுக்கோடிபவுன் (பத்தாயிரம் கோடி ரூபாய்) கடனாகி விட்டது.

இந்த மகாயுத்தத்தின் பயனாய் ஏற்பட்ட மொத்தம் 8600000000 எண்ணூற்று அறுபது கோடிபவுன் (பதினோராயிரத்து அறுநூறு கோடி ரூபாய்) என்று கணக்கிடப்பட்டு, அதில் யுத்த காலத்தில் குடிகளிடம் யுத்தவரி என்பதாக நூற்று எழுபத்து ஐந்து கோடி 1750000000 பவுன் (இரண்டாயிரத்து முன்னூறு கோடி ரூபாய்) வசூலித்து கடனுக்காகக் கொடுக்கப்பட்டது போக, அறுநூற்று எண்பத்தி ஆறு கோடி 6860000000 பவுன் பழைய தேசியக்கடனுடன் சேர்ந்து கொண்டது.

1919 வருஷத்தில் வெற்றி பாண்டுகளின் தொகை ஒரு முப்பது கோடி சேர்ந்து முன்குறிப்பிட்டபடி எழு நூற்றுப்பதினாறு கோடி 7160000000 பவுனாகி விட்டது. இந்தக்கடனைத் தீர்க்க என்று எவ்வளவோ தீவிர முயற்சிகள் செய்யப்பட்டன. என்ன செய்தும் பயன் படாமல் போய், கடன் தீர்க்கப்பட வேண்டிய வாய்தாக்கள் வேகமாக நெருங்கிக்கொண்டே வந்து கொண்டிருந்தன.

கடன் கொடுத்தவர்களை மறுபடியும் அதிகமான வாய்தாக் கொடுக்கும்படி தூண்டக்கூடிய மாதிரியில் ஒரு புதிய வழி கண்டு பிடிக்கப்பட்டது. அந்த வழி என்னவென்றால் "கடன்காரர்களுக்கு அவர்களுக்குச் செலுத்தப்படவேண்டிய அசல்கடன் தொகையின் மொத்தத்தை நூற்றுக்கு (100க்கு) ஐந்து வீதம் சேர்த்து கூட்டி புதிய பாண்டுகள் எழுதிக் கொடுப்பதுடன், அதற்கும் சேர்த்து வட்டி கொடுத்து வரப்படும்" என்பதாக விளம்பரங்கள் செய்யப்பட்டது. கடன் கொடுத்தவர்கள் எல்லோரும் இதற்கு சம்மதித்து உடனேயே தங்கள் தங்கள் கடனை 100க்கு 5 வீதம் கூட்டி, புதிய பாண்டுகளைப்பெற்றுக் கொண்டார்கள்.

இதன் பயனாக 1911ம் வருஷம் முதல் 1923ம் வருஷம் வரையுள்ள 12 வருஷகாலத்தில் மொத்த கடன் தொகையுடன் மறுபடியும் இருபது கோடி 200000000 பவுன் சேரவேண்டியதாகி, மற்றும் இந்தப்படியாக பெரும் பெரும் தொகை கூடிக்கொண்டே வந்து, 1932ல் இன்று 7530000000 எழு நூற்று ஐம்பத்தி மூன்று கோடி. (சற்றேறக்குறைய பத்தாயிரம் கோடி ரூபாய்) கடன் இருந்து வருகின்றது.

ஆகவே 1919ம் வருஷத்தில் மார்ச்சு மாதத்திலிருந்து வந்த எழுநூற்று நாற்பத்தெட்டுக் கோடி பவுனானது அது முதல் இதுவரை 13 வருஷ காலமாக எவ்வளவோ புதிய வரிகள் போட்டும் கடன்கள் பெருகி கூடுதலாகியிருக்கின்றதே தவிர அதிலிருந்து சிறிதும் குறைந்ததாக ஏற்படவில்லை.

## தேசீயக் கடனும், தொழிலாளியும்.

இனி மேல்கண்ட இந்த தேசியக் கடனானது தொழிலாளி சமூகத்தை எப்படிப் பாதிக்கின்றது என்பதைப் பற்றி சற்று கூர்ந்து கவனித்துப் பார்ப்போம். கிரேட் பிரிட்டனின் மொத்த ஜனத்தொகையாகிய 44000000 நாற்பத்தி நாலு கோடி ஜனங்களுக்கு, மேற்கண்ட தேசியக் கடனைப் பங்கிட்டால் நபர் ஒன்றுக்கு 171 பவுன் (இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ரூபாய்) வீதம் கடன் ஏற்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு 5 பேர் வீதம் கணக்குப்போட்டு அதாவது தாய், தகப்பன், மூன்று குழந்தைகள் என்பதாக கணக்குப் போட்டு, 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு கடன் எவ்வளவு ஆகின்றது என்று கணக்குப் பார்த்தால், குடும்பம் ஒன்றுக்கு 855 பவுன் (11000 ரூபாய்) கடன் ஏற்படுகிறது. இந்தத்தொகையானது பிரிட்டிஷ் ஜனங்கள் வருஷா வருஷம் வட்டி கட்டிக்கொண்டு வரவேண்டியதானதும், தலைமுறை தலைமுறையாய்த் தொடர்ந்து வரவேண்டியதுமான ஒரு நிரந்தர தொடர் கடனாக இருந்து வருகிறது. வட்டிப் பொறுப்பு இனி இந்தக் கடன் கொடுத்தவர்களுக்கு வருஷா வருஷம் செலுத்தி வரவேண்டியதான வட்டித்தொகை எவ்வளவு என்று பார்த்தோமானால் அது சராசரி வாரம் ஒன்றுக்கு 6000000 அறுபது வட்சம் பவுன் (அதாவது மாதம் இரண்டு கோடியே நாற்பது வட்சம் பவுன் அதாவது 360000000 முப்பத்தாறு கோடி ரூபாய்) வட்டி செலுத்தி வரவேண்டியதாகிறது. பிரிட்டிஷ் தேசத்தில் தொழில் செய்து பிழைத்துத் தீரவேண்டிய தொழிலாளிகளின் எண்ணிக்கை மொத்தம் 14000000. ஒரு கோடியே நாற்பது வட்சம் பேர்கள் என்று வைத்துக்கொண்டால் அவர்களில் ஒவ்வொரு தொழிலாளியும் வாரம் ஒன்றுக்கு 8 ஷில்லிங் 7 பென்சு வீதம் வட்டி செலுத்தித்தீரவேண்டிய விகிதம் ஏற்படுகிறது.

ஆகவே மேல்கண்ட ஒவ்வொரு தொழிலாளியின் வேலையின் பயனிலிருந்தும் வாரம் ஒன்றுக்கு 8 ஷில்லிங் 7 பென்சு (5 ரூ. 12 அணா வீதம் அதாவது தினம் 1க்கு தொழில் செய்யும் ஆள் ஒன்றுக்கு 13 அணா வீதம்) வீதம் வட்டி கட்டித் தீரவேண்டியதற்காக பாடுபடவேண்டியதாய் இருந்து வருகிறது.

சென்ற பத்து வருஷ காலத்தில் மாத்திரம் தேசியக்கடனுக்கு வட்டியாக 3200000000 முன்னூற்று இருபது கோடி பவுன் (நாலாயிரத்து இரநூற்று நாற்பது

கோடி ரூபாய்) செலுத்தி வந்திருக்கிறது. இவ்வளவு தொகை செலுத்தப் பட்டு வந்ததின் பயனாக அசல் தொகையானது இந்த பத்து வருஷத்திற்கு முன்னிருந்த தொகையிலிருந்து கூடுதல் ஆகியிருக்கின்றதே தவிர சிறிதும் குறைந்து வந்திருப்பதாக ஏற்படவேயில்லை.

### 1932-ம் வருஷத்தின் வரவு செலவு திட்டம்.

தேசியக்கடனின் யோக்கியதையானது இந்தப்படியிருக்கின்றது என்பது ஒரு பக்கம் இருக்க இனி மற்றொரு புள்ளி விபரத்தை சற்று கவனிப்போம்:—

அதாவது லேபர் கவர்மெண்டு என்று சொல்லப்படும் "தொழிலாளர் அரசாங்கத்தினால்" தயாரிக்கப் பட்ட 1932-ம் வருஷத்திய ரெவினியூ வரவு செலவு திட்டத்தை கவனிப்போம்.

1931—32-ம் வருஷத்திற்கு பிரிட்டனின் மொத்த ரெவினியூ வருமானத்திலிருந்து செலவு செய்யப் படவேண்டிய செலவு தொகை 751000000 எழுபத்தைந்து கோடியே பத்துலட்சம்பவுன் (இதில் தபால் இலாக்கா செலவு 52000000 பவுன் சேர்க்கப்பட வில்லை)

இந்தத்தொகையில் 312300000 முப்பத்தொரு கோடியே இருபத்தி மூன்று லட்சம் பவுன் (அதாவது 4684500000 நானூற்று அறுபத்து எட்டுக்கோடியே நாற்பத்தைந்து லட்சம் ரூபாய்) தேசியக்கடன் கொடுத்த முதலாளிகளுக்கு வட்டி கட்ட வேண்டியதாகும். 91800000 ஒன்பது கோடியே பதினெட்டு லக்ஷம் பவுன் (அதாவது 1377000000 நூற்றுமுப்பத்தேழு கோடியே எழுபதுலட்சம் ரூபாய்) ராணுவத்திற்கு செலவு செய்யப்படவேண்டும் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. 50396000 ஐந்து கோடியே மூன்று லட்சத்து தொண்ணூற்றாறாயிரம் பவுன். மேல்கண்டதேசியக்கடன்ஏற்பட்டதற்காதாரமானயுத்தங்களில் கொல்லப்பட்டவர்களுக்கும், வேலைசெய்தவர்களுக்கும் உதவித் தொகை கொடுக்க ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கின்றது.

ஆகவே இதுவரை நடந்த யுத்தத்திற்கும், இனி நடக்கவேண்டிய யுத்தத்திற்கும் இவ்வருஷ வரும்படியில் 454531000 நாற்பத்தைந்து கோடியே நாற்பத்தைந்து லட்சத்து முப்பத்தோராயிரம் பவுன் (அதாவது 6817965000 அறுநூற்று எண்பத்தோரு கோடியே எழுபத்தொன்பதுலட்சத்து அறுபத்தையாயிரம் ரூபாய்) ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. இந்தப்படியான மேல்படியுத்தக்கடன் வட்டியும் யுத்த முஸ்தீப்பு தயார் செய்யும் செலவும் இரண்டும் சேர்ந்து பிரிட்டிஷ் குடிஜனங்களுக்கு நபர் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு 11 ஷில்லிங் வீதம்செலவு ஏற்படுகின்றது.

இவ்வளவு பெரியதான இந்த செலவுகளுக்கு வருமான வழி எது என்று பார்த்தால் பிரிட்டிஷ் தேச வருமானத்திற்கே ஒரே ஆதாரமாய் இருப்பது தொழிலின் பயனாய் ஏற்படும் வரும்படியே யாகும். ஆகவே இந்தப்பளுவு தொழில் செய்து வாழும் தொழிலாளிகளின் தலையிலேயே விழுகின்றது. முதலாளிகள் அனுபவித்து வரும் சுகபோகங்களுக்கு தொழிலாளிகளின் தொழில் பயன்கள் போக வேண்டியிருப்பது இந்தமாதிரியான யுத்தச் செலவுகளுக்கும் அதன் வட்டிகளுக்கும் அதன் உதவித் தொகைகளுக்கும் தொழிலாளி மக்களின் தொழில் பயனே ஈடு செய்ய வேண்டியிருக்கிறது.

தொழிலாளிகளின் தொழிலின் பயன்கள் இப்படியெல்லாம் கொள்ளை போயும் பத்து லக்ஷக்கணக்கான தொழிலாளி மக்களும் அவர்கள் குடும்பங்களும் வேலையில்லாமலும்; போதுமான ஆகாரம் துணிமணி வீடு வாசல் இல்லாமலும், மற்றும்பலவிதமாய் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க நூறு லக்ஷக்கணக்கான பவுன்களை முதலாளிமார்கள் வருஷா வருஷம் வட்டியாக பெற்று வருவது மக்கள் வாழ்க்கைத் திட்டத்தில் முதலாளிகளின் ஆதிக்கம் எவ்வளவு வலுத்து இருக்கிறது என்பதை காட்டுகிறதல்லவா?

ஆகவே இந்தக் கடன்களை யெல்லாம் ரத்து செய்து, வட்டிகட்டி வருவதை நிறுத்தி அத்தொகைகளை வேலையில்லாதவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் பயன்படும் படியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அறிவு பெற்ற தொழிலாளிகளின் கடமையாகும்.

---

**ANANGARANGABATIKA.**

*(Enjoyment Pill)*

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity. ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**

## மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது.

கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சிலேப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம்உண்டாகும்மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அன்னிய நாட்டார் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S. I.

## வெள்ளை வெட்டைக்கு

சந்தனாதி மாத்திரை பிரமேகநெய்

சாப்பிட்ட 12-மணி நேரத்திற்குள் குணம் தெரியும்.

வெள்ளை, வெட்டை வியாதிகள் எவ்வளவு நாள் சென்றதாயிருந்தாலும் சரி, பொறுக்க முடியாத நீர் குத்தல், நீர்கடுப்பு, பிரமேகம், கல்லடைப்பு, சதை அடைப்பு, தாது நீரில் கலந்து வெளியாகுதல், நீர்விடுவதற்கு முன்னும் பின்னும் இந்திரியம் சொட்டு சொட்டாய் வெளிவருதல், ரெத்தவெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி, சொற்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், அஸ்திமேகம், இந்திரியபையில் ஏற்படும்ரணம், கொதிப்பு முதலிய நீர்தாரையிலுண்டாகும் சகல வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்யும்,

சந்தனாதி மாத்திரை, பிரமேக நெய் இரண்டும் சேர்ந்து விலை ரூ. 5 பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது. பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சீபுரம்.

# "இந்தியாவின் குறைபாடுகள்" என்ற புத்தகத்திற்கு
# டாக்டர் பராஞ்சிபை
## எழுதிய முகவுரை.

இந்திய நாட்டிலுள்ள சமூதாய விஷயங்களைச் சரிவர ஊடுருவிப் பரிசீலனை செய்ய முன்வரும் ஒவ்வொருவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனியேபோல் வெளியாகுவன எவையெனில்—இந்திய மக்கள் ஒவ்வொரு துறையிலும் (சாஸ்திரோக்த) சட்ட திட்டங்களுக்கு மிக மிகப் பயந்து அடிமைகளாக ஏங்கியிருப்பதும், பகுத்தறிவுச் சுடரை எள்ளளவும் ஏற்றிட்டுப் பாராதிருப்பதுமேயாம். இவைகளே இந்நாட்டில் காணப்படும் எண்ணிறந்த கஷ்டநிஷ்டூரங்களுக்கு மூல காரணங்கள் எனலாம்.

இன்னும், மத உலகில் சிறிது நுழைந்து ஆராய்வோமானால், மேற்குறித்த விஷயங்கள் மிகவும் தெளிவாக நன்கு புலப்படும். எத்தனையெத்தனை மதங்கள்! எத்தனையெத்தனை ஜாதிபேதங்கள்!! தவிர, செல்வாக்குமிக்க புரோகிதர்கள், குருமார்கள், மௌல்விகளென்ன! கணக்கற்ற கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் என்பபடும் பூஜாஸ்தலங்களென்ன; மாண்டோர் பொருட்டு கட்டப்படும் சமாதிகளிலும், ஈமச்சடங்குகளிலும் விரயமாக்கப்படும் கோடிக்கணக்கான திரவியமென்ன; ஏதோ உண்மைத் தத்துவங்களை விளக்குவனவாகக் கூறப்படும் பிரயோசனமற்ற சிக்கலான வைதீகச் சடங்குகளில் ஏராளமாக விரயமாகும் பொருள்களென்ன— இவைகளெல்லாவற்றினும், இந்திய சமூகத்தை உள்ளும் புறமும் தீவிர கோலமாக ஆட்டிவருவது மதம் என்னும் பேய் ஒன்றே என்பதைக் காட்டப் போதிய சான்றுகளாமன்றோ!

சாஸ்திர சட்டதிட்டங்களின் மேலான ஆதிக்கம், மேற்குறித்தவைகளிலேயேயன்றி ஏனைய இந்திய சமுதாய இயக்கத்துறைகள் பலவற்றிலும் பரக்கக்காணலாம். இந்தியர்கள் கர்னாடக பழைய முறைகளையே விவசாயம், கைத்தொழில் முதலிய துறைகளில் இன்னும் கையாண்டுவருவதற்குக் காரணமென்ன? அவைகள் சாஸ்திரங்களிலே ரிஷி புங்கவர்களால் விதிக்கப்பட்ட மாறாத தத்துவங்கள் என்பதாகக் கருதப்படுவதனாலேயன்றோ! தவிர, சமூகப் பழக்க வழக்கங்களில் எவை ஆதரிக்கப்படுகின்றன? நியாயம் எது? தகுதியானது எது? உபயோகமுள்ளது எது?—என்பன சிறிதாகிலும் கவனிக்கப் படுகின்றனவா? இல்லை. ஆனால், மதத்தலைவர்களாலும், சாஸ்திர புராணங்களாலும் ஆதரிக்கப்பட்ட விஷயங்கள் எவையாயினும் சரி, அவைகளே அதிசிரேஷ்டமாகக் கருதப்படுகின்றன. அரசியல் விஷயங்களிற் கூட குறிக்கப்பட்ட கொள்கைகளும், வழிகளும் நேரா? தவறா? என்பதைச் சிறிதும் சிந்தியாமல் இவர் கூறினார், அவர் கூறினார் என்று ஒரு தனிப்பட்ட மனிதனுடைய வாக்கையே பிரதானமாகக்கொண்டு நடக்கும், இந்தியருடைய மனப்பான்மை மேற்குறித்தவாறு அவர்களது அடிமைத் தன்மையையேயன்றி வேறெதைக் காண்பிக்கின்றது? மேலும், இந்திய தினசரி சஞ்சாரப் பத்திரிகைகளைப் புரட்டிப்பார்த்தால் அவற்றின் பெரும்பகுதி—சில முக்கியஸ்தர்களுடைய உபயோகமற்ற ஆர்ப்பாட்டங்களும், அனுதாபக் கூட்டங்களும், விருந்துகளிப்புகளோடு கூடிய பாராட்டுக் கூட்டங்களும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சில நாயன்மார்கள், குருமார்கள் மறைந்த நாட் கொண்டாட்டங்களும், ஆதிகால வீரசூரர்களுக்கென நடைபெறும் உற்சவங்களுமாக இருப்பதை இன்னும் காணலாம். பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்தால், வருஷத்தில் எல்லா நாட்களிலும் சாஸ்திர புராண சம்பந்தமான, ஒவ்வொரு திருவிழா குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்! இவ்வித பிரயோசனமற்ற விழாக்களாலேதான் இந்திய மக்களின் முக்கிய கைத்தொழில்களும், அனுபவங்களும் பிரகாசமின்றி இடர்ப்பட்டுக் கிடக்கின்றன.

இன்னும் இந்தியாவில் கூட்டுக் குடும்ப முறையை [Joint family system] உற்று நோக்குமிடத்து அதிலும் குறிக்கப்பட்ட அடிமைத்தன்மையே மேலோங்கியிருப்பதைத் தெளிவாகக் காணலாம்.

மேலும், இந்தியாவிலே அரசியல் துறைகளில் ஆதிக்கம் கொண்டுள்ள மேனாட்டு உத்தியோகஸ்தர்கள், இந்திய மக்களின் இயற்கை, அடிமை மனப்பான்மையே என எண்ணி, அதையே ஆதாரமாகக் கொண்டு—உண்மையான தலைவர்கள் எவ்வாறு மனிதர்களுக்கு விஷயங்களைப் போதித்து அவர்களுடைய அறிவிற்கு எட்டும்படி செய்யவேண்டுமோ அவ்வழிகளை அறவே துறந்து—எந்நாளும் மேலோங்காதபடி அடக்கு முறையைக் கடைப்பிடித்தொழுகுவதை எங்கணும் காணலாம். படித்த கூட்டத்தார்கள் அதிகார வர்க்கத்தினரைப் பத்திரிகைகளிலும் சட்டசபைகளிலும் தாக்கிவரக்காரணம் இதுவேயாகும்.

இந்தச்சிறு புத்தகத்தின் நோக்கம் யாதெனில்:—பகுத்தறிவுக் கொள்கையைப் பரவச்செய்து அறிவுக்கொவ்வாத ஆதாரங்களின் ஆதிக்கத்திற்கு அடிமையாக இருக்கும் மனப்பான்மையை வேரோடு அழிப்பது ஒன்றே இந்தியாவின் உண்மையான முன்னேற்றத்திற்கு நேரான வழியென்பதை உணர்த்துவதேயாகும்.

இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள மூடப் பழக்க வழக்கங்கள், இந்தியாவிலே மட்டுந்தானிருக்கின்றன என்பதாகத் தீர்மானித்துவிடவேண்டாம். மற்றத் தேசங்களிலும் இவைபோன்ற அநேக அட்டூழியங்கள் காணப்படுகின்றன. ஆனால் மற்ற தேசங்களில் இந்தியாவிலிருப்பதுபோல் கெடுதிகள் அவ்வளவு அபரிமிதமாக இல்லாமல் சற்றே குறைந்து காணப்படுகின்றன என்று மட்டுமே கூறலாம். மேனாடுகளை எடுத்துக் கொண்டோமானால்—ரோமன் கத்தோலிக் எனப்படும் கிறிஸ்துமதம் பரவியுள்ள தேசங்கள் மற்ற தேசங்களைவிடப் பின்னடைந்திருப்பதற்குக்காரணம் பொதுமக்களுக்கு இடமளித்து அத்தேச மக்களின் அறிவெனும் ஜோதியை மறைத்து, அந்தமதப் பாதுகாப்பாளருடைய கோஷ்டியானது சட்டதிட்டங்களால் அம்மதஸ்தர்களை அடிமைக்குழியில் ஆழ்த்திவைத்திருப்பதே முக்கியகாரணமாகும். முற்போக்கில் சிறந்துவிளங்கும் புராட்டெஸ்டான்ட் எனப்படும் வேறு கிறிஸ்துவ தேசங்களிலோவெனில் மதமானது பல்வேறு பிரிவுகளாகச் சிதறுண்டிருப்பதோடு அங்குள்ள பெரும்பான்மையான மக்கள் முற்குறித்த மதப் பிரிவினைகளில் காணப்படும் எதிர்மாறான கொள்கைகளில் ஒரு சிறிதும் கவனம் செலுத்தாமல்-- ஏன்? மனப்பூர்வமாக வெறுத்தே வருகின்றனர்.

அந்நாடுகளிலேயும் அறிவியக்கத்திற்கு விரோதமான அல்லது கிறிஸ்தவத்துவம் [Christian Science] மூலாதாரத்துவம் [Fundamentalism] எனப்படும் பல இயக்கங்களிருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் அவைகள் நமது "அறிவியக்கம்" எனும் தெளிந்த நதியை ஒருக்காலும் கலக்கிவிட முடியாதெனலாம். எனவே ஓர் பகுத்தறிவாளி [Rationalist] எவ்வித எதிர்ப்புகளுக்கும், மறைப்புகளுக்கும், மனிதர்களுக்கே இயற்கையான தாமதகுணத்தாலேற்படும் தடைகளுக்கும்—சிறிதும் இடம் கொடுத்துப் பின் வாங்காமல் தனது கொள்கைகளை எல்லாவித முறைகளிலும் கடைப்பிடித்தொழுக வேண்டியவனேயாவான்.

எது எவ்வாறிருப்பினும் சரியே, தேசிய முன்னேற்றம் மிகவும் சீர்குலைந்து பகுத்தறிவு வளர்ச்சி (Rationalism) சுத்த சூனியமாக இருக்கும் நமது நாட்டின் நிலைமை மட்டிலுமே நாம் முக்கியமாகக் கவனிப்போமாக. முக்கியமாக ஒன்றை மட்டும் கூறி இம்முகவுரையை முடிக்கின்றோம்.

பகுத்தறிவிற்கு மாறுபடாத களங்கமற்ற தேசீயத்தை பகுத்தறிவு இயக்கம் (Rationalism) எவ்வகையிலும் எதிர்க்காதென்பதையும், மேலும், இந்த பகுத்தறிவுக் கொள்கையானது [Rationalism] ஐக்கியமும், முன்னேற்றமும், சுயமரியாதை உணர்ச்சியுமே நமது இந்திய தேசத்தில் தோற்றுவிக்க மிகுந்த உதவியளிக்குமென்பதையும் பன்முறையும் வற்புறுத்திக் கூறுகின்றோம்.

---

## "ஜக ஜோதி"

ஆராவயல் சண்முக நாதபுரம் தோழர் சி.சு.சித. சிதம்பரம் அவர்கள் துணைவியார் தோழர் அலர்மேலு அவர்கட்குப் பெண் குழந்தை பிறந்தது. அப்பெண் குழந்தைக்கு "ஜக ஜோதி" என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. அது சமயம், தோழர்கள் ராமசுப்பையா, விசாலாட்சி அ. பொன்னம்பலம், சிதம்பரம் சிசு. சித. ஆகியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆதாரமுண்டு என்று வாதிக்கிறார்கள் இந்தவாதம் புதியதல்ல. இது ஓர் பழமையானவாதமே. ஆனால் நமது சில கண்டனக்காரர்கள் (Our Critics) சில மெஞ்ஞானிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களுடைய நூல்களில் சிலவற்றிலிருந்து கடவுள் இருப்புக்கு ஆதாரமாக சில மேற்கோள் கொடுக்கின்றார்கள். இந்த வாதமும் புதியதல்லவென அறியவேண்டும். அந்தந்த காலத்தில் சில மெஞ்ஞானிகள் தோன்றி மெஞ்ஞானத்திற்கு அதிதப்பட்ட விஷயங்குறித்து தங்கள் நம்பிக்கையையும், அபிப்பிராயங்களையும் தெரிவித்தால், அவ்வித அபிப்பிராயங்களைக்காட்டி மெஞ்ஞானிகள் மதத்தை ஆதரிக்கின்றார்கள், கடவுள் இருப்பதாக ஒத்துக்கொள்கின்றார்கள் என்று அந்தந்த காலத்தில் மதஸ்தர் வாதாடி வந்திருக்கின்றனர். அதுபோலவே இன்றைக்கும் சில மெஞ்ஞானிகள் தங்கள் மெஞ்ஞான விஷயங்களுக்கு அதிதப்பட்ட நம்பிக்கை, கோரிக்கைகளைப்பற்றி ஏதாகிலும் அபிப்பிராயப்பட்டாலும், அல்லது உத்தேசித்தாலும், அவைகளை மெஞ்ஞான முடிவுகள் என்று நமது கண்டனக்கர்த்தாக்கள் வாதிக்கின்றார்கள்.

நமது "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலில் சில மெஞ்ஞானிகளின் மெஞ்ஞான முடிவுகளை ஆதாரமாகக்கொண்டெழுதினேம். அம்மெஞ்ஞானிகளின் நூல்களில் சிலவற்றையும் குறிப்பிட்டோம். ஆனால் நமது கண்டனக்காரர்களில் ஒருவர் கேட்கின்றார். Sir James Jeans சர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்ற வானநூலாசிரியருடைய "Mysterious Universe" அதாவது மர்மமான "பிரபஞ்சம்" என்ற நூலை ஏன் நமது புத்தகத்திற்கு ஆதாரமாகக்கொள்ளவில்லை என்று கேட்கின்றார்? சில வான ஆராய்ச்சி செய்வோர் முக்கியமாக ஜீன்சும் (Jeans), எட்டிங்கடனும் (Eddington,) இவ்விரு பிரபலவான சாஸ்திரிகள் கடவுள் இருப்பதாக ஆதாரங்களைக்காட்டியுள்ளார் என்றும் வாதிக்கின்றார்கள். இதுவுண்மையாவென அறிதல் வேண்டும்.

இந்த வருஷ முதலில் "சண்டமாருதம்" பத்திரிக்கையில் இதே மாதிரி வாதத்தை புதுக்கோட்டையில் ஜட்ஜாக இருந்துவரும் செஞ்சையா அவர்கள் தான் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டித்து இத்தியாதி வாதம் ஆதாரமற்ற வாதமென்று சற்று விபரமாகக்காட்டியுள்ளோம், இந்த நொண்டிவாதமெனப்படும், அதாவது நொண்டிக்குதிரைக்கு சறுக்கியது லாபம் என்பதுபோல் மதங்களுக்கு மெஞ்ஞானிகளில் சிலர் மத விஷயங்களில் சறுக்கினதே போதும் போலும்! அப்படி மெஞ்ஞானத்தில் (Science) மெஞ்ஞானிகள் சறுக்கியதாகக் காணப்படவில்லை. மதங்களின் சறுக்கை சகித்துக்கொள்ள முடியுமேயொழிய மெஞ்ஞானத்தில் எவ்வித சறுக்குக்கும் இடமிரா. சறுக்கும் மெஞ்ஞானம் எங்குமில்லை. தனக்குத்தெரிந்தவரை மெஞ்ஞானம் தெரியுமென்று உறுதியாகக்கூறும். தெரியாதவரை திர்க்கமாக தனக்குத்தெரியாதென்றே சாதிக்கும். இதுதான் மெஞ்ஞானத்திற்குள்ள மதிப்பும் யோக்கியமும். இந்த மெஞ்ஞானத்திற்கிடாக எவ்வித ஞானமென்பதெல்லாம் ஒன்றும் இல்லை என அறிக. இவ்விஷயங்களை சற்று விபரமாகக்கண்டறிவாம்.

ஒரு காலத்தில் மதங்கள் உண்மையென வெறும் வாத மூலமாக மதாபிமானிகள் வாதாடி வந்தனர். மெஞ்ஞானம் உலகையும், பிரபஞ்சத்தையும் ஆராயவந்தபோது ஏதோ ஒரு மெஞ்ஞானி (Scientist) மெஞ்ஞானத்திற்கு அதிதமான மதங்களைப்பற்றி தனது சொந்த அபிப்பிராயத்தைச்சொன்னால், மெஞ்ஞானம் மதங்களை ஆதரிப்பதாக வாதாடுகின்றனர். இதுதான் தற்கால வாதம். இதையே நமது நிருபர்களில் சிலர் வாதிக்கின்றார்கள். எவ்வளவு மெஞ்ஞானிகள் மதங்களை ஆதரிக்கின்றார்கள்? அவ்வித ஆதரவுக்கு என்ன மதிப்பு? அவ்வித ஆதரிப்பு மதக்கோட்பாடுகளை உண்மை என ருசுப்படுத்துகின்றனவா? இவைகளைசற்று விபரமாக அறிதல்வேண்டும்.

முதலாவது மெஞ்ஞானம் மதங்களுடைய முக்கிய கோட்பாடாகிய "கடவுள் இருப்பை" (Existence of God) ஆதரிக்கின்றதா என்பதை பார்ப்போம். மெஞ்ஞானம் (Science) சேதனம் (உயிருள்ளப்பொருள்கள்) அசேதனம் (உயிரில்லாப்பொருள்கள்) இவைகளை விசாரித்தறியும் ஞானமாகும். இவைகளை ஆராயும் நூல்களை எதை எடுத்துக்கொண்டாலும், (Biology) அதன் உட்பிரிவுகளாகிய Sociology, Anthropology, Physiology, Zoology, Geology, முதலிய நூல்களில் யாதும் கடவுள் இருப்பைப்பற்றி பேசுவதே இல்லை. கடவுள் எண்ணம், பேய் பிசாசுகளின் எண்ணம் முதலிய கற்பிதச் சொற்கள் எப்படி வந்ததென்பதைக்குறித்து (Sociology) பேசும் அசேதனப்பொருள்களைப்பற்றி பேசும் நூல்களாகிய Astronomy, Physics, Chemistry, Mathematics கடவுளைப்பற்றி பேசவேண்டிய வேலையே இல்லை. கடவுளைப்பற்றி பேசும் மதநூல் ஒன்றே, கடவுள், மோட்சம், நரகம், புண்ணியம், பாபம், மன்னிப்பு, பிரார்த்தனைகளைப் பற்றி பேசும் அதன் பெயர் (Theology) என்று பெயர். (Theology) யில் சொல்லும் விஷயங்கள், பார்த்தலுக்கும், பரீட்சைக்கும் உட்படாதாகையால் அந்நூல் மெஞ்ஞானமாகாது. ஆதலின் கடவுள் இருப்புக்கு மெஞ்ஞானத்தில் எந்தவித ஆதரவு கிடைக்காது. மானவநூல் ஒன்று மனதைப்பற்றி பேசும் நூலொன்று (Psychology) உண்டு. அதிலும் கடவுளுக்கு எந்தவித ஆதரவும் கிடையாது. ஆனால் கடவுளை இருப்பதாக எந்த நூல்தான் கூறுகின்றது எனக்கேட்டால் அது (Metaphysics) என்று சொல்லவேண்டும். அதாவது கடவுள் இருப்பைப்பற்றி பேசும் நூல்கள் வேதாகம புராண வேதாந்த நூல்களே. புலன்களுக்கு புலப்படாததும், பரீட்சைக்கு உட்படாததும், வெறும் மனோகற்பிதமானதுமான கடவுள் என்ற சொல்லை (Metaphysics) அதாவது வேதாந்தத்தில் காணலாம். ஆனால் இந்த (Metaphysics) அதாவது வேதாந்தம் (Science) விஞ்ஞானமாகாது. ஆதலின் மெஞ்ஞானத்தில் கடவுளுக்கு எவ்வித ஆதரவும் கிடையாது என்று அறியவேண்டும்.

இரண்டாவது மெஞ்ஞானிகள் மூலமாகவாயினும், கடவுள் இருப்புக்கு எந்தவித ஆதரவும்உண்டா? என்பதற்கு பதிலளிப்பாம்.

விஞ்ஞானிகளில் பெறும்பான்மையோர் நாஸ்திகரென்றே சொல்லவேண்டும். (See Secptical Chemist by Professor Needham) ஆனால் சில மெஞ்ஞானிகள் பழக்க வாசனையாலோ, அல்லது பொதுஜன வாழ்த்தலுக்கு (Popular Applause) ஆசைப்பட்டோ, மதவிஷயமாக தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்கின்றார்கள். ஆனால் இவர்கள் கடவுளைப்பற்றி கொண்டுள்ள அபிப்பிராயங்கள் மதாபிமானிகளுக்கு முற்றிலும் உதவாத அபிப்பிராயங்களாகவே இருக்கக்காணலாம்.

ஒரு நிருபர் இரண்டு மெஞ்ஞானிகளைக்குறிப்பிட்டு அவர்கள் கூறும் கடவுள் கூற்று தனது கடவுளுக்கு ஆதாரவென்று எண்ணுகின்றார். இவர்கள் யாரெனில் நமது கடவுளும், பிரபஞ்சமும், என்ற புத்தகத்தில் கண்டுள்ள விஞ்ஞான அதிகாரிகளே. இவ்விருவர்களில் ஜீன்ஸ் [Jeans] எட்டிங்டன் [Eddington] இவர்களில் [Jeans] எழுதியுள்ள "மறைவான பிரபஞ்சத்தை" Mysterious Universe நான் படிக்கவில்லைபோலும் என்று கருதுகிறார். ஆனால் அச்சிறு புத்தகம் சென்னைக்கு வந்தவுடன் முதலில் படித்தவர்களில் நான் ஒருவன். அந்நூல் மெஞ்ஞான நூலாகாதாகையால் அதில் கண்ட அத்தியாயமாகிய "ஆழமான நீரில்' into Deeper waters கண்டுள்ள விஷயமுழுமையும் ஜீன்சினுடைய சொந்த அபிப்பிராயங்களாகும். இந்த அபிப்பிராயங்களாகிலும் மதஸ்தருக்கு ஏதாகிலும் ஆதரவை அளிக்கின்றதாவென்று பார்த்தால் அது ஒன்றுமில்லை. அந்தப் புத்தகத்தில் கண்டுள்ளபடி ஜீன்ஸனுடைய "கடவுள்" எப்படிக்கொத்தவரென்றால் "கடவுள்" கண்ணுக்கு ரூபமாக இருப்பாராம்! அவர் "Mathematical God" கணக்கு கடவுளாம்! அந்த "கணக்கு கடவுளுக்கோ" நீதியோ, நெறியோ, சுகமோ, துக்கமோ, கோரமோ, அகோரமோ, நன்மையோ, தின்மையோ, புண்ணியமோ, பாவமோ, யாவும் அதீதமாம்! (See Mysterious Universe page 3. 149.) இத்தியாதி "கடவுள்" எந்த இந்து, மகமதியன், கிறிஸ்துவனுக்கு வேண்டும்? நமது கண்டனக்காரர்கள் இத்தியாதி "கடவுளை" வேண்டுமானால் நூறு கணக்காக வைத்துக்கொள்ளட்டும் ஆனால் எந்த பக்தனும் நமது வங்காளக் குடாக்கடலில்தான் The Bay of Bengal "அந்தக்கடவுளை" வீசி எறிவான்! ஜீன்ஸ் அவர்கள் "கடவுளை" ப்பற்றி எழுதியுள்ள வாதங்கள் யாவும் அவருக்கே நிச்சயமில்லையாம்!! "மறைவான பிரபஞ்சத்தில்" 141-வது ஏட்டில் அவர் எழுதியுள்ளதை நமது நிருபர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். "தான் (ஜீன்ஸ்) சொல்லிய விஷயங்கள் யாவும் வாஸ்தவத்தில் வெறும் உத்தேசங்களாகவும் நிச்சயமில்லாதவைகளாகவும் Frankly speculative and uncertain கொள்ளவேண்டுமாம்"! இந்த மண்குதிரையை நம்பித்தான் மதஸ்தர்கள் தங்கள் "கடவுளை" ருசுப்படுத்தப் போகின்றார்கள் போலும்!! ஜீன்ஸ் கூறும் "கணிதக்கடவுள்" ஜீன்ஸுக்கே நிச்சயமில்லாதிருக்க நமது நிருபர்களுக்கு என்ன நிச்சயமென்று கேட்கின்றோம்?

நமது நிருபர் காட்டிய மற்றொரு விஞ்ஞானியின் அதாவது எட்டிங்டன் (Eddington) மதக்கூற்றை சற்று விசாரிப்போம். இவரது Science and unseen Universe page 145) "மெஞ்ஞானமும் தெரியாத பிரபஞ்சமும்" என்ற நூலில் 145-வது ஏட்டில் Iam wholly opposed to any proposal to base religion on Scientific Discovery) அதாவது உங்கள் கடவுளை நிரூபிக்கவேண்டுமானால் விஞ்ஞானத்தினருகே வராதே. இங்கே உங்கள் கடவுளுக்கும் எந்தவித ஆதரவும் கிடைக்கமாட்டாது. இவர் இயற்றியுள்ள இன்னொரு நூலில் (Nature of the Physical World) "பௌதிக உலகின் தன்மை" என்ற நூலிலும் மத நம்பிக்கைகளுக்கு மெஞ்ஞானம் எந்தவித ஆதரவும் அளிக்காது

## மாமாங்கம் என்றால் என்ன? மடமக்களே! மாமாங்கத்திற்குப் போகிறீர்களா? வெட்கமில்லையா?

என்று மதஸ்தர்களுக்கு எச்சரிக்கை செய்துள்ளார். இரண்டு மண் குதிரைகளை நம்பி எந்த மதஸ்தனுகிலும், பக்தனுகிலும், தனது கடவுளுக்கு ஆதாரம் விஞ்ஞானிகளிடம் தேடமுடியுமாவென்று கேட்கின்றோம்?

உண்மை என்னவெனில் "கடவுள்" என்ற சொல் பழமையான பிரகாசத்தை தற்காலத்தில் இழந்து மழுங்கி வருகின்றது. அந்த சொல்லின்பேரில் வைத்துள்ள பக்தி விசுவாசம் உலகில் குறைந்துகொண்டே வருகிறது. நமது சுயமரியாதையோர் இடித்துவரும் இடியாலும் அந்த சொல்லுக்கிருந்த பயபக்தியும் குறைவுபட்டு வருகின்றது. எங்கு பார்த்தாலும் கடவுளென்ற பெயருக்கே அபாயம் வரும்போல் இருக்கின்றது. இத்தருவாயில் ஆழமான தண்ணீரில் மூழ்கிப்போகின்றவன் (Like the drowning Man) மிதக்கும் துரும்பை தாவிப்பிடிப்பதைப்போல் (Catching at a straw) மதஸ்தர்கள் முழுகிப்போகும் தங்கள் கடவுளை சில மெஞ்ஞானிகளைக்கொண்டாகிலும் காப்பாற்றலாமெனக்கருதுகின்றார்கள். அந்தோ! அந்த மெஞ்ஞானிகளும் அந்தக்கடவுளைக் கரை சேர்ப்பதாகக் காணோம்! பரிதாபம்!!

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

### மார்க்ஸ் கொள்கையில் ஈடுபடுகிறவர்கள்.

மார்க்ஸ் கொள்கையில் ஈடுபடுகின்றவர்கள் ஒவ்வொரு நிலையிலும் அவ்வப்போதைய அந்தரங்க உணர்ச்சியும் எப்படிப்பட்டது, அதனின் உண்மை என்ன என்பதைக் கண்டுபிடிக்க சக்தி உள்ளவர்களாகவே இருக்கவேண்டும். எதேச்சை வாதத்திற்கும் சமயோசித வாதத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை கண்டுபிடிக்க சக்தி உள்ளவனாக இருக்கவேண்டும். இந்த வித்தியாசங்கள் எப்போதும் ஒரு நிலையில் இல்லாமல், அடிக்கடி மாறிக்கொண்டுவந்த போதிலும் என்றும் இருந்தேதான் தீரும். மார்க்சை பின்பற்றுகிறவன் ஒரு பக்கத்தில் வெறும் வார்த்தை அளவில் பெரும் புரட்சியை உண்டாக்கப்போவதாக வாய்ப்பந்தல் போடும் வேஷக்காரரான எதேச்சைவாதிகளுடன் சேராமலும், மற்றொரு பக்கத்தில் சுயநலமே பெரிதெனக்கொண்டு சமயத்திற்கு தகுந்தபடியெல்லாம் நடித்து மதத்தோடு யுத்தம் செய்யத்தயங்கி, தன்னுடைய கடமைகளை மறந்து கடவுள் நம்பிக்கைக்கும் இடம் கொடுத்து தொழிலாளிகளுடைய உண்மை விடுதலைத் தன்மையை மறந்து, பிறருக்கும் வருத்தம் கொடுக்காமலும், பிறர் தன்னைவிட்டு ஓடிப்போகாமல் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டும் அவரவர்கள் இஷ்டப்படி அவரவர்களை நடக்க இடம்கொடுத்துக்கொண்டிருக்கும் சமயோசிதவாதியுடனும் சேரக்கூடாது.

### சமதர்ம கட்சியில் பாதிரிகளை சேர்த்துக்கோள்ளலாமா?

இந்த நோக்கத்தைக்கொண்டுதான் நம்முடைய கட்சியார் மதத்தைப்பற்றி எவ்வித திட்டம் போடுவது என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும்.

உதாரணமாக சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியில் ஒருபாதிரியை (பிராமணனை) சேர்த்துக்கொள்ளலாமா என்கின்ற பிரச்சினை அடிக்கடி கிளப்பப்படுகின்றது. வழக்கத்தில் எவ்வித ஆட்சேபணையும் இல்லாமல் அவர்களை சேர்த்துக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டும், அதற்கு ஆதாரமாக மற்ற தேசங்களில் உள்ள சமதர்ம ஜனநாயக (சோஷியல்டெமாக்கிறேட்) கட்சிகளில் சேர்த்துக்கொண்டு வரப்படுவதாக எடுத்துக் காட்டப்பட்டும் வருகின்றது. ஆனால் இந்த அனுபவத்தை கவனமாய் பரிசீலனை செய்து பார்த்தால் இதன் காரணம் மார்க்சினுடைய தத்துவத்தை தொழிலாளர் இயக்கம் பின்பற்றியதின் பயனாக இயற்கையாய் ஏற்பட்ட முடிவு அல்ல என்பதும், மேற்கு ஐரோப்பிய தேசங்களில் சரித்திர பூர்வமாய் ஏற்பட்டிருக்கும் நிலைமையை ஒட்டி ஏற்பட்ட முடிவு என்பதும் தெளிவாய் விளங்கும். இந்த மாதிரி நிலைமை ருஷ்ய தேசத்தில் சரித்திர பூர்வமாக ஏற்படவில்லை. ஆகையால் பாதிரிகளை (பிராமணர்களை) தடையில்லாமல் கட்சியில் சேர்த்துக்கொள்ளலாம் என்பது ருஷ்ய தேசத்து நிலைமைக்கு பொருந்தாததாகும். நாம் ஒரே அடியாக எந்தக்காலத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் பாதிரிகளை நம்மோடு சேர்த்துக்கொள்ளலாம் என்பதாக ஒப்புக்கொள்ள முடியாது ஒரு பாதிரி

## குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம் கும்பகோண மகாமகம்.

நம்முடைய நோக்கங்களிலும், வேலைகளிலும் நம்மோடு ஒத்துழைக்கும் நோக்கத்துடன் வருவாரானால் நமது கட்சியின் வேலைத்திட்டங்களை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டும் காரியத்தில் அனுஷ்டித்துக்காட்டுவதுடன் நமது வேலைகளுக்கு எந்த சந்தர்ப்பத்திலும் எவ்வித தடங்கலும் செய்யாமல் இருக்கக்கூடியவராய் இருத்தல்வேண்டும்.

இப்படிப்பட்டவரை நாம் சேர்த்துக்கொள்வதில் ஆட்சேபிக்க வேண்டியதில்லை. ஏனென்றால் நம்முடைய கட்சியின் கொள்கைகளும் திட்டங்களும், நமது தத்துவங்களும், லட்சியங்களும் அந்தப்பாதிரியினுடைய மதக்கோட்பாடுகளுக்கு விரோதமாய் இருந்தபோதிலும் அவ்விரோதம் அந்தப்பாதிரியின் வாழ்க்கையில் மாத்திரம் ஏற்பட்டு அவர் மாத்திரம் பாதிக்கப்படுகிறாரேஒழிய அது நம்முடைய கட்சியை பாதிக்கிறதில்லை. அரசியல் வேலையில் ஈடுபடும் ஒரு கட்சியானது அதன் அங்கத்தினர்களின் வாழ்க்கையின் தத்துவங்களுக்கும் கட்சியின் திட்டங்களுக்கும் ஏதாவது முறண்பாடுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ச்சிசெய்துகொண்டிருக்க முடியாது அப்படிப்பட்ட ஆராய்ச்சிமேல் ஐரோப்பிய தேசங்களில் செய்யப்படுவதில்லை. அதிலும் ருஷியதேசத்தில் ஏற்பட அவசியமே இல்லை. ஆனால் உதாரணமாக ஒரு பாதிரி (சோஷியலிஸ்ட் டெமாக்கிறேட்) சமதர்ம ஜனநாயகக்கட்சியில் சேர்த்துக்கொண்டு அந்தப்படி தன்னை சொல்லிக்கொண்டு அதற்கேற்ற யாதொரு காரியத்தையும் செய்யாமல் வெறும் மதப்பிரசாரத்தை மாத்திரம் செய்துகொண்டு இருப்பாரானால் அப்படிப்பட்டவரை கட்சியில் இருந்து நீக்கிவிடுவது அவசியமாகும்.

### சமதர்ம ஜனநாயக கட்சியில் ஆஸ்த்திக தொழிலாளியைச் சேர்த்துக்கொள்ளலாம்.

சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியில் கடவுளிடம் நம்பிக்கை வைத்திருக்கும் தொழிலாளியை நாம் சேர்த்துக்கொள்ள சம்மதிப்பதோடு மாத்திரம் அல்லாமல் அப்படிப்பட்ட தொழிலாளிகள் யாவரையும் நம்மோடு சேர்த்துக்கொள்ள நாம் பாடுபடவேண்டும். அதற்காக தனிப்பட்ட முயற்சிகளும் செய்யவேண்டும். மற்றும் அப்படிப்பட்ட தொழிலாளிகளின் மத நம்பிக்கைகளை அவமதிப்பதையும் நாம் தடுக்கவேண்டும். அவர்களை நம்முடைய கட்சியில் சேர்த்துக்கொள்வதின் நோக்கம் நம்முடைய திட்டத்தின் அந்தரங்கத்தை அவர்கள் உணருமாறு செய்வதற்கேயல்லாமல் அவர்களைச் சேர்த்துக்கொள்வதின் மூலம் அவர்களிடம் நமது மதச்சண்டைகளை பெருக்கெடுக்குவதற்காகவல்ல. நம்முடைய கட்சியின் அங்கத்தினர்களுக்கு மத விஷயத்தில் அபிப்பிராய பேதமிருப்பதற்கு நாம் தாராளமாய் இடம்கொடுக்கவேண்டும். ஆனால் நம்முடைய கட்சியின் பெருவாரியான அங்கத்தினர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமான பிரசாரத்தைச் செய்பவர்களை நாம் சேர்த்துக்கொள்ளக்கூடாது. அந்தப்படி பிரசாரம் செய்ய இடம் கொடுக்கவும்கூடாது.

### பேச்சுக்கும், எழுத்துக்கும் உள்ள வித்தியாசம்.

மற்றொரு உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். நமது அங்கத்தினர்களில் சிலர் "சோஷியலிசமே என்னுடைய மதம்" என்று வெளிப்படையாகக் கூறுவதை நாம் எப்பொழுதும் சரி என்று ஒப்புக்கொள்ளுகின்றோமா? என்கின்ற கேள்வி பிறக்கின்றது. இம்மாதிரி கூறுகின்றவர்கள் மார்க்சினுடைய தத்துவத்தில் இருந்து அதாவது சமதர்மத்தில் இருந்து மாறுபட்டவர்கள் என்பது வெளிப்படை. ஆனால் அவர்களிடம் ஏற்பட்டிருக்கும் மாறான அபிப்பிராயத்தின் அளவு சமயத்திற்கு தக்கவாறு குறைந்தோ கூடியோ இருக்கும்.

மேடைமேல் ஏறி முற்போக்கடையாத தொழிலாளிகளின் முன் பிரசங்கம் செய்யும் காலத்தில் பிரசங்கியானவர் தன்னுடைய பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருக்கும் படிப்பில்லாத பாமர ஜனங்கள் தனது எண்ணத்தை சரியானபடி உணரும் பொருட்டு அவர்களது புத்திக்கு எட்டும்படியான நிலையில் தனது பாஷையில் மதம் என்றவார்த்தையை உபயோகித்து தனது எண்ணத்தை விளக்குவாரேயானால் அந்த மதம் என்னும் வார்த்தை அவ்வளவு பெரிய குற்றமாய்விடாது. ஆனால் ஒருவன் புஸ்தகம் எழுதும் போது கடவுளுடைய சிருஷ்டியைப்பற்றி சொல்லி கடவுள்

சோஷியலிசத்தை (சமதர்மத்தை) சிருஷ்டித்தார் என்று நமது லூனசார்ஸ்கி கூறுகிற மாதிரி எழுதுவானேயானால் அது வேறு விஷயமாகும். முதலில் பேசிய பிரசங்கியை குற்றம் சொல்லுவது வீண் வேலையாகும். பிரசாரகர்களுக்கு பிரசங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறவர்களின் மனோ நிலைக்குத்தக்கவாறு வார்த்தைகளை உபயோகிக்க உரிமை இருக்கவேண்டும். ஆனால் இரண்டாவதவரான நூலாசிரியரை கஷியால் கண்டிக்கவேண்டியது அவசியமான கடமையாகும். ஏனென்றால் முன்னவர் ஜனங்களை அவர்கள் மத்தியில் இருந்து பேசி சோஷியலிசத்திற்கு இழுத்துச் செல்லுகிறார். பின்னவர் மக்களை சோஷியலிசத்திலிருந்து மதத்திற்கு இழுத்துச் செல்லுகிறார்.

### மதம் சொந்த விஷயம் என்பதற்கு ஏன் பல அர்த்தம்.

மதம் என்பது அவரவர்கள் சொந்த விஷயம் என்னும் கொள்கையை மேற்கு தேசங்களில் சமயோசிதம் போல் அர்த்தம் செய்ய நேர்ந்ததைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம். சமயோசித வாதத்திற்கு ஏற்படும் பொதுக் காரணங்களே இந்த விஷயத்திலும் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக தொழிலாளர் இயக்கத்தின் உண்மை முன்னேற்றத்தைப்பறிகொடுத்து தற்காலிகமான சில சௌகரியங்களை உண்டாக்கிக்கொள்வது போலாகும். தொழிலாளர் கட்சியின் கோரிக்கையானது அரசாங்கத்தார் மதத்தை அவரவர்கள் சொந்த விஷயமாகக்கருதவேண்டும் என்பதே ஒழிய, பொது ஜனங்களுக்குப்போதை தரும் வஸ்துவாக ஏற்பட்டிருக்கும் மதத்தினுடைய மூடக்கொள்கையை எதிர்த்து நிற்கும் போராட்டத்தை எவருடைய சொந்த வேலையாகவும் நமது கட்சி கருதவில்லை

ஆனால் சமயோஜித வாதிகள் நமது கொள்கையை திரித்துக்கூறி, சோஷியலிஸ்ட் ஜனநாயகக் கட்சியானது மதத்தை அவரவர்கள் சொந்த விஷயமாக பாவிக்கிறது என்று கட்டுக்கட்டிவிட்டார்கள். சமயோசித வாதிகள் திரித்துக்கூறுவது மாத்திரமல்லாமல் தற்காலத்திய ஐரோப்பிய சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியில் சேர்ந்தவர்களிடம் மத விஷயமாய் புத்திகோளாறு இருப்பதற்கு சரித்திரபூர்வமான சில காரணங்கள் உண்டு, இந்தக்காரணங்கள் இரண்டு வகைப்படும்.

### முதலாளி பிரபு புரட்சி.

முதலாவது சரித்திர பூர்வமாய் பார்த்தோமானால் மதத்தின் பேரில் தொடுக்கும் யுத்தமானது மேற்கு தேசங்களில் புரட்சியை ஏற்படுத்திய முதலாளி புரட்சிக் கட்சி ஆரம்பித்ததாகும். மத்தியகாலத்தில் ஆட்சி பெற்றிருந்த பிரபுத்வத்தை எதிர்ப்பதற்காகக் கிளம்பிய முதலாளி புரட்சிக்கட்சிகளே மதத்தின் பேரிலும் யுத்தம் தொடங்கின. பிரான்ஸ், ஜர்மனிமுதலிய தேசங்களில் என்சைக்ளோ பீடிஸ்ட் Encyclopediasts பூர்பாக் Feurback முதலியவர்கள் மூலம் சோஷியலிசம் (சமதர்மம்) ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னமேயே முதலாளி கூட்டங்கள் மதத்தோடு யுத்தம் தொடங்கின. ருஷிய தேசத்தில் நமது புரட்சி இயக்கம் ஏற்பட்ட நிலைமையில் மதத்தோடு யுத்தம் செய்து தீரவேண்டியதாய் ஏற்பட்டு விட்டது. நமது முதலாளி ஜன நாயக இயக்கங்கள் இவ்விஷயத்தில் மேற்கு ஐரோப்பிய தேசங்களில் நடந்த அளவு முற்போக்கடையவில்லை.

ஆனால் முதலாளி கூட்டம் மதத்தின் பேரில் யுத்தம் தொடங்கியதின் பயனாக இப்போது மேற்கு ஐரோப்பிய தேசங்களில் மதத்தைப்பற்றிய விஷயங்களில் எதேச்சைவாதிகளுடைய முறண்பாடுகளுக்கு இடம் ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவுதான் இந்த எதேச்சைவாதிகள் முதலாளி கூட்டத்தாரின் பேரில் வாயளவில் அவதூறு சொன்ன போதிலுங்கூட எதேச்சைவாதிகளுடைய நோக்கம் எல்லா விஷயங்களிலும் முதலாளிகளின் நோக்கங்களைப்போலவே இருந்திருக்கிறது. இதை மார்க்ஸ் கட்சிக்காரர்கள் நற்கவமே விளக்கிக்காட்டி இருக்கிறார்கள். (தொடரும்)

---


## மணமகள் தேவை.

சுமார் 21 வயதுடையவரும் நன்றாக எழுதபடிக்கத்தெரிந்தவரும் மேடையில் எதி பேசும் திறமை வாய்ந்தவரும், சுயமரியாதை இயக்கத்தில் அளவு கடந்த பற்றுதல் உடையவருமான ஒருவருக்கு பெண் தேவை. பெண் 18 வயதுக்குள்பட்டவராகவும், எழுதப்படிக்க தெரிந்தவராகவும், சுயமரியாதை இயக்கத்தில் அளவு கடந்த பற்றுதல் உடையவராகவும்இருத்தல்வேண்டும். பெண் எக்குலமாயினும் சரி விதவையாயினும் சரி, மணம் முடிக்க ஆட்சேபனையில்லை. விருப்பமுடையவர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

கே. ராமய்யா,
சுயமரியாதை இளைஞர் சங்கக் காரியதரிசி, கோட்டாறு.

அதிர்ஷ்டம் மாத்திரமல்ல
அறிவுதானம் செய்த பலனுமுண்டு.

**பச்சையப்பன் கலாசாலை**

# லாட்டரி.

ரூ. 1,00,000- பிரைஸ்கள் 3059. முதல்பிரைஸ் ரூ. 20,000
ஒரு டிக்கட் விலை. ரூ. 1
முடியும் தேதி 30-6-33. எடுக்கப்படும் தேதி 31-7-33.
மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

காரியதரிசி,
வி. திருவேங்கிடசாமி எம். ஏ.
பச்சையப்பன் ஹாஸ்டல், சேத்துப்பேட்டை; மதராஸ்.

Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
## By Dr. Paranjpye M. A., D. Sc.

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvanation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print, well gotup and neatly bound about 120 Pages

Price per copy ... ... Rs 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

**Kudi Arasu Book Depot. Erode.**

# எங்கே கிடைக்கும்?

பல மருந்துகளையும் கையாடி பயனடையாமல் இருப்பவர்கள் தக்க மருந்தையறிந்துகொள்ளும் பொருட்டு இதைப்பிரசுரம் செய்திருக்கிறேம்.

எவ்வித வியாதிக்கும் ஏற்றமருந்து பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில்தான் கிடைக்கும்.

வியாதிவிபரம் எழுதி ஏற்ற மருந்தை அடையுங்கள்! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.



## "SUPERSTITION OF KHADI"


A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.
Price annas. 0 2 0



## ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சந்தேகமில்லை, ஆச்சரியமில்லை, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இலந்து பூத்த புஷ்பங்களின் சத்து) மணமிருந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி 3-அணு. படைமருந்து 12 மணி நேரத்தில் பரிபூரண குணம்



டப்பி 1-க்கு 3அணு. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித்தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப் பௌண்டன் பேனு 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்காட் லீவர் பாக்கெட்வாச் 1-ம், இனமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும். பாக்கிங் தபால் செலவு தனி.

விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 90,
Calcutta.



## Goshaye office pillss.
### கோஷாயி ஆபீஸ் மாத்திரை



Dr.T.K.V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.



## தமிழ் நாட்டு பெற்றோர்களே!

முந்துங்கள்! முந்துங்கள்!!

## மெட்ரிக்குலேஷன்
### அறிவை

தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடின் தொழில் செய்து கொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம். இஸ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பாஸாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்கள், S. S. L. C. தவறியவர்களுக்கு அதிக பிரயோஜனமானது. நமது மாணவர்களின் வெற்றி K. சீனிவாசகன் (ஹையர் கிரேட்) IV பாரம் படித்தவர்கடந்த கே. சீனியர் பாஸ் செய்துசக்கண்ட ரீபாக மாற்றப்போகிறார். Dr. H S. சுப்பரமணியம் 4 மாதங்களில் படித்து பாசாகி கடைசி 2 வருஷ M. B. B. S. படிக்கிறார் மற்ற விபரத்திற்கு உடன் எழுதவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
(தலைமை ஆபீஸ்) ஆறுமுகநேரி S. I. R.


**மதத்தை ஒழிப்பது உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.**

**கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.**

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழவேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0

## மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் ராசம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.